Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


சாறிகள், பட்டு வேட்டிகள்,
கூறை சாறிகள் மற்றும்
ரெடிமேட் ஆடைகள், பல்வேறு
துணி வகைகள், பிளவுஸ்
துணி வகைகள் யாவற்றுக்கும்
வருகை தாருங்கள்

சிவகணேசன் ரெக்ஸ் ரைலிஸ்

41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி-2014)

T.P NO:
222 2063


மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 29 (22.01.2004) வியாழக்கிழமை இதழ் :113

# 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற மட்டு - அம்பாறை பொங்குதமிழ் நிகழ்வு!




(மட்டக்களப்பு)

"வீரம் விளைநிலம் வெற்றிப் பெரும்தளம்" என்ற கோஷத்துடன் நேற்று மட்டக்களப்பில் பொங்குதமிழ நிகழ்வு உணர்ச்சிப் பிரவாகத்துடனும் எழுச்சிபூர்வமாகவும் நடைபெற்றது.

வந்தாறு மூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக திறந்த வெளியரங்கில் எழுபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருக்க, எழுச்சிபூர்வமாக இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வு இடம்பெற்றது.

பொங்குதமிழ் நிகழ்வையொட்டி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் பிரதான வீதிகள், முக்கிய இடங்கள் எங்கும் பொங்கு தமிழை வரவேற்கும் அலங்கார வளைவுகள், பதாதைகள், சிவப்பு மஞ்சள் கொடிகள் என்பன கட்டப்பட்டிருந்ததுடன், வர்த்தக நிலையங்களெங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் அருளானந்த ராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் ஆரம்பத்தில் மாவீரர் லெப்.கேணல் ஜோய்/ விசாலகனின் தாயார் பொதுச்சுடர் ஏற்ற, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)




# ஜே.வி.பி–சுதந்திரக்கட்சி கூட்டணியால் நாட்டில் மீண்டும் போர் மூளும் ஆபத்து!

## தமிழ்ச்செல்வன் – அகாஷி இன்று வன்னியில் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்செல்வனை ஜப்பான் விசேடதூதுவர் யசுஷி அகாஷி இன்று கிளிநொச்சில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். யசுஷி அகாஷியுடன் இலங்கைக்கான யப்பானிய தூதுவர் அகிம் சூடா (12 ஆம் பக்கம் பார்க்க)

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை

(லண்டன்)

**சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி உடன்பாடு எட்டப்பட்டிருப்பதால் கடந்த ஒருவருட காலமாக நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களின் மூலம், தமிழ்மக்களின் தேசியப் பிரச்சினைக்கு - யதார்த்தமானதுமான தீர்வு எதையும் எட்டமுடியாதநிலை ஏற்பட்டிருப்பதுடன் மீண்டும் போர் ஏற்படக்கூடிய அச்சத்தையும் ஏற்படுத்தியிருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம் ஜே.வி.பியும் சுதந்திரக்கட்சியும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி என்ற கூட்டணியை உருவாக்கியுள்ளமை குறித்து 'தமிழ்நெற்' இணையத்தளத்துக்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது -

சமாதானத்துக்கு எதிரான இந்தக் கூடடணி உடன்படிக்கை தேசியப் பிரசசினைக்குத் தீர்வு காணப்படுவதில் முரண்பாடானதொரு நிலையை ஏற்படுத்தி மீளவும் போர் ஏற்படுவதற்கான ஆபத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

எமது தலைமைத்துவம் இந்த விடயத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. தற்போது ஏற்பட்டிருக்கும் சிங்கள - பௌத்த கூட்டணி சமாதானத்துக்கும், சமாதான முயற்சிக்கும் எதிர்ப்புக் காட்டி வந்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தம் வழியில் செல்வதற்கு சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும்

(கொழும்பு)

தமிழர் தம் வழியில் செல்ல சர்வதேச சமூகம் அங்கீகாரம் அளிக்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கை வந்துள்ள யப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷியை கொழும்பில் சந்தித்து உரையாடியபோதே அவர்கள் இதனை வலியுறுத்தினர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.அவர்கள் அங்கு மேலும் தெரிவிக்கையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பநிலைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே பொறுப்பானவர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இடைக்காலத்திட்டம் தொடர்பான வரைபை அரசாங்கத்திடம் சமர்ப்பித்து மூன்று நாட்களுக்குள் முக்கியமான மூன்று அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி - அரசாங்கத்திடமிருந்து பறித்துக்கொண்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

பொலிஸாரை

சூடா (12 ஆம் பக்கம் பார்க்க)

# கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை

(லண்டன்)

**சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி உடன்பாடு ஏற்பட்டிருப்பதால் கடந்த ஒருவருட காலமாக நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களின் மூலம், தமிழ்மக்களின் தேசியப் பிரச்சினைக்கு - யதார்த்தமானதுமான தீர்வு எதையும் எட்டமுடியாதநிலை ஏற்பட்டிருப்பதுடன் மீண்டும் போர் ஏற்படக்கூடிய அச்சத்தையும் ஏற்படுத்தியிருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம் ஜே.வி.பியும் சுதந்திரக்கட்சியும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி என்ற கூட்டணியை உருவாக்கியுள்ளமை குறித்து 'தமிழ்நெற்' இணையத் தளத்துக்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது -

சமாதானத்துக்கு எதிரான இந்தக் கூட்டணி உடன்படிக்கை தேசியப் பிரசசினைக்குத் தீர்வு காணப்படுவதில் முரண்பாடானதொரு நிலையை ஏற்படுத்தி மீளவும் போர் ஏற்படுவதற்கான ஆபத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

எமது தலைமைத்துவம் இந்த விடயத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. தற்போது ஏற்பட்டிருக்கும் சிங்கள - பௌத்த கூட்டணி சமாதானத்துக்கும், சமாதான முயற்சிக்கும் எதிர்ப்புக் காட்டி வந்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் தம் வழியில் செல்வதற்கு சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும்

(கொழும்பு)

தமிழர் தம் வழியில் செல்ல சர்வதேச சமூகம் அங்கீகாரம் அளிக்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கை வந்துள்ள யப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷியை கொழும்பில் சந்தித்து உரையாடியபோதே அவர்கள் இதனை வலியுறுத்தினர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.அவர்கள் அங்கு மேலும் தெரிவிக்கையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பநிலைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே பொறுப்பானவர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இடைக்காலத்திட்டம் தொடர்பான வரைபை அரசாங்கத்திடம் சமர்ப்பித்து மூன்று நாட்களுக்குள் முக்கியமான மூன்று அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி - அரசாங்கத்திடமிருந்து பறித்துக்கொண்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# மத்தியஸ்த நிலையிலிருந்து நோர்வே அரசு நீக்கப்படுமாம்!

## புதிய கூட்டணி தெரிவிப்பு

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடருமெனவும், ஆனால் நோர்வேயின் மத்தியஸ்தம் மீள் பரிசீலனை செய்யப்படுமெனவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும்- ஜே.வி.பியும் இணைந்து உருவாக்கியுள்ள புதிய கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

இந்த முன்னணியின் முதலாவது பத்திரிகையாளர் மாநாடு கொழும்பில் நேற்று நடந்தபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்ததாவது-

சமாதான முயற்சிகளை நாம் மிகவும் பரந்த அளவில் முன்னெடுப்போம், இதற்கு உறுதுணையாக மூன்றாவது சக்தியாக ஜே.வி.பி இணைந்துள்ளது.

அத்துடன், போர்நிறுத்த உடன்படிக்கை நிலையானது. எனவே இதிலிருந்து விலகி விடுதலைப் புலிகள் போருக்கு செல்லமுடியாது. சமாதானப் பேச்சுவார்த்தை சரியான திசையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் ரீல்வின் சில்வா- லக்ஸ்மன் கதிர்காமர் - மைத்திரிபால சிறிசேன ஆகியோரைப் படத்தில் காணலாம்

## பொலிஸாரை காணவில்லை!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் காணாமற்போயிருப்பதாக, இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது -

மன்னார் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய மாத்தளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வினாதேஸ்வரன் (வயது 32) என்ற பொலிஸ் கொன்ஸடபிள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளக்குமுறல் அடங்கும்வரை பொங்குதமிழ் பொங்கும்!

(மட்டக்களப்பு)


தமிழ் மக்களின் உள்ளக் குமுறல் அடங்கும்வரை பொங்கு தமிழ் பொங்கும் என நேற்றைய பொங்கு தமிழ் நிகழ்வுப் பிரகடனத்தில் கூறப்பட்டிருந்தது. இந்தப் பிரகடனத்தில்-

தமிழ் மக்களாகிய நாம் நீதியான கௌரவமான நிரந்தர தீர்வுக்காக மனஉறுதியுடனும் நம்பிக்கையுடனும் மனித உரிமைகள் பற்றி பேசுகின்ற, போதிக்கின்ற சர்வதேச சமூகத்திற்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
(சி-2009)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# மட்டக்களப்பு பொங்குதமிழ் நிகழ்விலிருந்து சில காட்சிகள்...


பொங்குதமிழ் நிகழ்வையொட்டிய அலங்கார வளைவு


தேசியத்தலைவரின் உருவப்படத்துடன் மதத் தலைவர்கள்


பொங்குதமிழ் ஊர்தி


நிகழ்வின் ஆரம்பத்தில் பான்ட் அணி வகுப்பு


தேசியத் தலைவரின் படங்களைத் தாங்கியவாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேரணியில்


ஈகைச்சுடரேற்றுகிறார் மாவீரர் லெப்.கேணல் விசாலகனின் தாயார்


தேசியக்கொடி ஏற்றுகிறார் மட்டு - அம்பாறை கல்வித்துறைப் பொறுப்பாளர் வேந்தன்


அரங்க நிகழ்வில் ஒரு காட்சி


உறுதியை எடுக்கும் மக்கள்


மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ்


மட்டு - அம்பாறை மகளிர் சிறப்புத் தளபதி நிலாவிழி


நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்


நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன்


யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பகீரதன்.

படங்கள்:- சலீம்


**விற்பனைக்கு**

உங்கள வீட்டுக்குத் தேவையான அனைத்து மின்சார உபகரணங்களும், பான்சி பொருட்களும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். Telesonic, Rikon, Pacific, Usha, Sunda வகையில் Fans, gas cookers, Blenders, Clocks, Food Jars, Ceiling Fans, Thermos, China flask இன்னும் பலதரப்பட்ட உபகரணங்களும் உண்டு.

RAJU STORES
67, 69 Kasthuriar Road,
Jaffna.
T.P:- 222 5224
Fax:- 222 5224 (சி/2060)

**சிறு விளம்பரம்**

**மணமகள் தேவை**

பிரான்சில் வசிக்கும் 35 வயது நிரம்பிய சதய நட்சத்திரமும் உதயத்து செவ்வாய் கொண்ட மணமகனுக்கு பெற்றோர் மணமகளை தேடுகின்றனர். மணமகள் வெளிநாட்டில் இருப்பது விரும்பத்தக்கது. சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.22 மே/பா நமது ஈழநாடு, இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**யசோ இறபர் ஸ்டாம்**

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

**றோமன் கத்தோலிக்க பெருமக்களே உங்களுக்கு ஓர் நற்செய்தி**



பழைய ஏற்பாடும் சேர்ந்த பைபிள் 275/=, புதிய ஏற்பாடு மட்டும் 85/= சொற்ப பிரதிகள் மட்டுமே கைவசமுள்ளது. உடனே பெற்றுக்கொள்ள

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021 2225542

**நிறஞ்சனாஸ்** சங்கானை

அர்ஜுன், சிம்ரன் நடித்த

**ஏழுமலை**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
Can You do a lot of (சி-2004)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த

**ஜெய்**

காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-2005)

- வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புக்கள் ஒரு நிமிடத்திற்கு 8/=
- ஞாயிற்றுக்கிழமைமைகளில் ஒரு நிமிட வெளிநாட்டு அழைப்பு இலவசம்
- தொலைபேசி வசதி உள்ளவர்கள் வீடுகளில் இருந்தபடியே வெளிநாடுகளுக்கு குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்ளும் வசதி
- இணைப்புத் தொலைபேசி அழைப்புக்களை பெறுபவர்களுக்கு மாதாந்தம் பெறப்பட்ட அழைப்புகளுக்கான விபரப்பட்டியல் வசதி
- மற்றும், ஈமெயில், பக்ஸ், போட்டோக் கொப்பி சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**அருள் கொமினிக்கேசன்**

இல. 01 பிறவுண் வீதி,
நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
☎ T.P:- 3536

# ஜே.வி.பி. சுதந்திரக்கட்சியுடன் இணைந்து முதலாளித்துவ ஜனநாயக அரசை அமைக்கும்

## ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ தெரிவிப்பு



(கொழும்பு)

ஜே.வி.பி.சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து உண்மையான முதலாளித்துவ ஜனநாயக அரசாங்கத்தை அமைக்கப்போவதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்சமயம் ஆட்சியில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் ஊழல் மிகுந்த அரசாங்கத்துக்கு மாற்றாக இவ்வாறான அரசாங்கம் தேர்தல் வெற்றி ஒன்றின் பின்னால் அமைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

இதனை முன்னிட்டு, இலங்கைக்கு வருவதற்காக லண்டனிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் ஏசியன் ரிபியூன் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் கைத்தொழில் உரிமையாளர்கள் ஆசிய நாடுகளான- மலேசியா, இந்தியா மற்றும் சீனாவைப்போன்று சொந்த நலனை எதிர்பார்க்காது, நாட்டின் வளர்ச்சிக்கு உதவிபுரியவேண்டும். மக்கள் விடுதலைமுன்னணி, தமிழீழ விடுதலைப் புலிகள், ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பு ஊடக இதழ்கள் என்பன கூறுவதைப்போல, மாக்ஸிச சித்தாந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதில்லை. அவை முதலாளித்துவ வளர்ச்சியை நோக்கிச்சென்றுகொண்டிருக்கிறன.

இலங்கையில் பௌத்த கலாசாரத்தின்படி, நாட்டிலிருந்து வெளியேறாதவகையில் ஒரு மாக்ஸிச கொள்கையை மக்கள் விடுதலை முன்னணி விரும்பி நிற்கிறது.

ரணில் விக்கிரம சிங்கவின் அரசாங்கத்தைப் போலல்லாது, மக்கள் விடுதலை முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்த கூட்டணி நாட்டுக்கு அவசியமான தேவைகளை இனங்கண்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க தமது சொந்த நலனைக்கருத்திற்கொண்டு செயற்பட்டமையால், இலங்கையின் இறைமைக்கும், உறுதிப்பாட்டுக்கும் ஊறு விளைவித்துள்ளார்.

கொலைகளுக்கும், சித்தரவதைக்கும் மத்தியில் மக்கள் விடுதலை முன்னணி உயிர் பெற்றிருப்பதற்கு அந்த முன்னணி எப்போதும் பௌத்த தர்மத்தில் கொண்டுள்ள நம்பிக்கையே காரணமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க- அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கூறுபவற்றை செயற்படுத்துவதானது - இலங்கை அமெரிக்காவின் இன்னொரு மாநிலமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அதிகார பரவலாக்கலை முழுமையாக நிராகரிக்கிறது. இந்த அதிகாரப்பரவலாக்கல் கொள்கையினால் நாட்டின் மேலும் பல பிரச்சினைகள் இடம் பெற வாய்ப்புள்ளது. அதேநேரம் அது தமிழ் மக்களுக்கும் உரிய தீர்வை ஏற்படுத்திக் கொடுக்காது.

இலங்கையின் பெரும்பான்மை சிங்கள மாகாணங்களில் 55 வீத தமிழ் மக்கள் வசிக்கின்றனர். வடக்கு - கிழக்கில் 12 வீதமான தமிழ் மக்களே வாழ்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் - தமது சொந்தப் பாதுகாப்பைக் கருத்திற்கொணடு, யாழ்ப்பாண குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர், பெரும்பான்மையான தமிழர்களை வன்னிப் பிராந்தியத்தில் குடியேறச்செய்தார். வேலுப்பிள்ளை பிரபாகரன் - வடக்கிலிருந்து சிங்களவர்களையும், முஸலிம்களையும் வெளியேற்றியதைப்போன்று, கிழக்கிலும் அவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்டார்.

இந்தநிலையில், எதிர்காலத்தில் இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டால் வடக்கு - கிழக்கில் வசிக்கும் 2 வீதமான தமிழ்மக்கள் - நாட்டின் நிலங்களில் மூன்றில் ஒரு பகுதியை தம் வசப்படுத்திவிடுவர்.

அத்துடன், மூன்றில் இரண்டு - கரையோரப் பிரதேசமும் அந்த மக்களுக்குச் சென்றடையும். தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டால், அது பெரும்பான்மை தமிழர் உட்பட, வடக்கு - கிழக்கிற்கு வெளியில் வாழும் மக்களுக்கு நிலங்கள் அற்ற பிரச்சினையை உருவாக்கும்.

எனவே, சிறிலங்கா சுதந்திர கட்சியின் அதிகார பரவலாக்கலுக்குப் பதிலாக அரசியல் தீர்வு ஒன்றை மக்கள் விடுதலை முன்னணி விரும்புகிறது.

எனினும், அது மக்கள் ஆணையின் அடிப்படையில் அமைய வேணடும் என்பதில் முன்னணி உறுதியாக உள்ளது.

சிறிலங்கா சுதந்திர கட்சி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு என்ன தீர்வை வழங்கவிருந்தது என்பது தமக்குத் தெரியாது என்று குறிப்பிட்ட சோமவன்ச அமரசிங்க - போர் நிறுத்த உடன்பாடு அமுலுக்கு வந்தபின்னரும், இலங்கையில் போர் என்பது ஓயவில்லை.

போரை ஆரம்பிப்பதா, இல்லையா என்பதை மக்களே தீர்மானிக்கவேண்டும் எனவும் சோமவன்ச தமது செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர், அது முக்கியமானதொரு வெளிநாட்டுக் கொள்கையாகும் என, குறிப்பிட்டுள்ளார். (01)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்குப் புவியியற்துறை மண்டபத்தில் புகழ்பெற்ற வங்காள நெறியாளர் ‘அபர்ணா சென்’ உருவாக்கிய “பராமா” என்ற வங்காள மொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடன் காட்டப்படும்.

படக்காட்சியின் இறுதியில், எழுத்தாளர். அ.யேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப் படுத்தலின் கீழ் கலந்துரையாடலும் இடம பெறும்.

## பாவனைக்குதவாத மிக்சர் பைக்கற்றுகள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள வியாபார நிலையம் ஒன்றில், விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மிக்சர் பைக்கட்டுக்கள் மனித பாவனைக்குதவாதவையென அந்தப் பகுதி பொது சுகாதாரப் பரிசோதகரின் திடீர் பரிசோதனையின்போது, கண்டறியப்பட்டு, உரிமையாளரின் சம்மதத்துடன் 19 மிக்சர் பைக்கற்றுக்கள் அவரது முன்னிலையில் எரியூட்டி அழிக்கப்பட்டன.

## வீதி சிரமதானம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுமத்தி சனசமூக நிலையம், சென்.ஜோன் விளையாட்டுக்கழகம் என்பன இணைந்து கடந்த 17 ஆம் திகதியன்று, வீதி சிரமதானங்களை மேற்கொண்டது.

நெடுந்தீவுப் பிரதேசசபை சந்தியிலிருந்து வலவை வீதியின் இரண்டரை கிலோ மீற்றர் பகுதியினை, பெருமளவிலான அங்கத்தவர்கள் சேர்ந்து சிரமதானம்மூலம் துப்பரவு செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (113)

## கூட்டணி உடன்படிக்கையையிட்டு தமிழ்மக்கள் பயப்படத்தேவையில்லை

### கதிர்காமர் கருத்து



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டணி உடன்படிக்கையையிட்டு, தமிழ்மக்கள் எந்தவித அச்சமும் அடையத் தேவையில்லை என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கையின்மூலம், தமிழ்மக்களுக்குமட்டுமன்றி, நாட்டுக்கும் நன்மை ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவுக்கும் மற்றும் இந்தப்பிராந்தியத்துக்கும், இந்தக் கூட்டணியின்மூலம் நன்மை கிடைக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதன்மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணலாம் என்றும் இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கிறது.

இதனால், புலிகளுடன் நியாயமான நிபந்தனைக்கமைய பேச்சு நடத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகும் என்றும் கதிர்காமர் தெரிவித்தார்.

## கைதியை குரூர வதைக்கு உட்படுத்திய அதிகாரிக்கு கடூழிய சிறைத் தண்டனை

(கொழும்பு)

கைதுசெய்யப்பட்ட வேளையில் - கைதி ஒருவரை குரூரவதைகளுக்கு உட்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட உதவி பொலிஸ் அதிகாரி ஒருவருக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் 4 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

பிரதிவாதியான பொலிஸ் அதிகாரிக்குப் பல தடவைகள் மன்றிற்கு வருமாறு அழைப்பாணை விடுக்கப்பட்ட போதிலும், அவர் சமுகமளிக்கத் தவறிய நிலையிலேயே இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய வேளையில்- மொஹமட் அப்துல் ரஹீம் என்பவரைக் குரூரமான முறையில் சித்திரவதைக்கு உட்படுத்தினார் என்று, பிரதிவாதியான திலகரட்ண ஜெயலத் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

## சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு பிரதான கட்சிகள் ஏன் இணையக்கூடாது?

### விநாயகமூர்த்தி கேள்வி



தேர்தல் தொகுதி - மறுசீரமைப்புத் திட்டத்தை அமுல்படுத்துவதில், இணைந்துள்ள இருபெரும் கட்சிகளும் - ஏன் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதிலே இணைந்து செயற்படமுடியாது என, தமிழர் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்பொழுது நடைமுறையிலுள்ள தேர்தல் தொகுதி முறையை மாற்றியமைக்கும் நடவடிக்கையில், ஐக்கியதேசியகட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்பன ஈடுபட்டு வருகின்றன.

புதிய தேர்தல் நடைமுறையை அமுல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற தெரிவுக்குழுவைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார். புதிய தேர்தல் நடைமுறையை அமுல்படுத்துவதில் இரு பெரும் சிங்கள அரசியற் கட்சிகளும் தீவிரமுனைப்பாகவுள்ளன. இது எமக்கு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இனிவரும் காலங்களில் அரசு ஒனறை அமைப்பதில், சிறுபான்மைக கட்சிகளின் ஆதரவு பெறப்படவேண்டிய அவசியமில்லாத வகையிலேயே தேர்தல் சட்டத்தை மாற்றுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதனை நான்கு தமிழ்க் கட்சிகள் உள்ளிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், மலையகக் கட்சிகள் உட்பட ஏனைய சிறுபான்மை கட்சிகளும் இணைந்து எதிர்க்கவுள்ளன. எனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## அழிவுகளுக்கு காரணமாகவிருந்த சோமவன்சவை கைதுசெய்யுங்கள்!

### நாடாளுமன்றில் ரவிராஜ்

(கொழும்பு)

மனித உயிர்கள் பலவற்றை அழித்தொழித்து, தொழிற்சாலை பலவற்றை தீயிட்டுக் கொளுத்தி நாசப்படுத்திய மக்கள் விடுதலை முன்னணி - தனது கடந்த காலத்தை மறந்துவிடக்கூடாதென்று, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் ரவிராஜ் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்தகைய பாதகமான செயல்களில் ஈடுபட்ட பின்னர், நாட்டைவிட்டுத் தப்பியோடிய சோமவன்ச அமரசிங்கவே - இப்போது நாட்டுக்குத் திரும்பியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அவரை மீண்டும் நாட்டைவிட்டுச் செல்ல அனுமதிக்காமல், கைது செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ரவிராஜ் கேட்டுக் கொண்டார்.

## நிபந்தனைகளோடு புலிகளுடன் பேச்சு சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி இணக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், வெளியிடப்பட்ட பஞ்சகொளகைகளில் - பொருளாதாரம், அரசியல், சமூக இன நல்லுறவு போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இலங்கையின் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு, விடுதலைப் புலிகளுடன் நியாயமான நிபநதனைகளுடன் பேச்சுவார்ததை நடத்துவதற்கு, இரு கட்சிகளும் இணக்கம் கண்டுளளன.

அனைத்து இனங்களுக்கும் சமத்துவ அடிப்படையில் உரிமைமைகளைப் பெற்றுக்கொடுத்து, ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பதுவே இரண்டு கட்சிகளினதும் எதிர்பார்ப்பாகும்.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரத்தைப் பகிர்வதன்மூலம் இந்தக் குறிக்கோளை அடையமுடியுமென, சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

எனினும், பிரதேசமட்டம்வரை நிர்வாகத்தை பன்முகப்படுத்துவதன் மூலம், இந்தக் குறிக்கோளை அடையமுடியுமென மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது.

இதேவேளை - தற்போதைய அரசியல் யாப்பிற்குப் பதிலாக, புதிய அரசியல் யாப்பொன்றை உருவாக்கவும் இரண்டு கட்சிகளும் இணக்கம் கண்டுள்ளன.

அத்துடன், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை நீககி, நாடாளுமன்றததுக்கு அதிக அதிகாரங்களை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் செல்லவுள்ள

# சிம்பாப்வேக்கான சுற்றுப்பயணத்தை இங்கிலாந்து அணி ரத்து செய்யலாம்

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் சிம்பாப்வேக்கு மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த பயணத்தை, இங்கிலாந்து கிரிக்கெட் அணி பெரும்பாலும் ரத்துச்செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்தவாரம் நடைபெறவுள்ள கூட்டமொன்றிலேயே இந்த கிரிக்கெட் சுற்றுப்பயணம் குறித்த முடிவை இங்கிலாந்து கிரிக்கெட் சபை எடுக்கவுள்ளது.

கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் அங்கத்தவர் ஒருவர் கொடுத்த 17 பக்கங்கள் அடங்கிய அறிக்கையை முதலில் ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இந்த 17 பக்க அறிக்கை கவனத்தில் எடுக்கப்பட்டாலும், இங்கிலாந்து அணி சிம்பாப்வே செல்வதற்கு குறைந்தளவு சந்தர்ப்பமே உள்ளது. அத்துடன், செல்லாமல் விடுவதில் தான் அதிகளவு சாத்தியங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இங்கிலாந்து கிரிகெட் சபையின் குழு விவகாரத் தலைவர் டெஸ் வில்சன் பி.பி.ஸி நிகழ்ச்சியொன்றில் உரையாற்றும்போது - இங்கிலாந்து அணி சிம்பாப்வேக்குச் செல்வதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன், இது இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின்



முடிவு, எனது முடிவல்ல. இதில் எந்த வித கருத்துக்கும் இடமில்லை. இந்த சுற்றுப்பயணம் ரத்துசெய்யப்படலாம்.

இதேவேளை, சிம்பாப்வே கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் பீற்றர் சின்கொகா தெரிவிக்கையில், சிம்பாப்வேக்கு வராமல் இங்கிலாந்து அணி இருப்பதையிட்டு அந்த நாட்டு கிரிக்கெட் சபை எமக்கு எவ்வித அறிவித்தலையும் தரவில்லை. ஆனாலும், இங்கிலாந்து அணி எமது நாட்டுக்கு வருமென நாம் எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவித்தார்.

# பந்தை சேதப்படுத்தியதால் டிராவிட்டுக்கு அபராதம்!

மூன்று நாடுகள் இடையேயான கிரிக்கெட் போட்டி அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவருகிறது. இதன் 6 ஆவது லீக் ஆட்டம் பிரிஸ்பேனில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் இந்திய - சிம்பாப்வே அணிகள் மோதியபோது, பந்தைச் சேதப்படுத்திய டிராவிட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. போட்டியில் இருந்து பெற்ற பணத்தில் 50 சதவீதம் அபராதமாக அவருக்கு விதிக்கப்பட்டது.

களத்தடுப்பின்போது, டிராவிட் ஜெல்லி என்னும் இனிப்பு திரவத்தை பந்தில் தேய்த்ததை மூன்றாவது நடுவர் பீட்டர் பார்க்கர் கண்டுபிடித்தார். பொதுவாக வீரர்கள் களத்தில் இருக்கும்போது ஜெல்லி என்னும் இனிப்பு திரவத்தை சாப்பிடுவது வழக்கம். அப்படி சாப்பிடும்போது டிராவிட் வாயிலிருந்த ஜெல்லியால் பந்தைத் தேய்த்தார்.



கிரிக்கெட் விதி 42.3 இன் படி பந்தின் தன்மையை மாற்றுதல் தவறாகும். அதன்படி போட்டி நடுவர் கிளைவ் லொயிட் அவருக்கு அபராதம் விதித்தார்.

இதேவேளை, இன்று நடைபெறும் இந்திய - அவுஸ்ரேலிய போட்டியில் டெண்டுல்கர், ஷேவாக், அகர்கர் ஆகியோர் உடல் தகுதியிருப்பதால் விளையாடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விளையாட்டு

# ஹொலன்ட் செஸ் போட்டி ஆனந்த் முன்னிலையில்!



(விஜ்க்ஆன்ஜி)

கோரஸ் செஸ் சம்பியன்ஷிப் தொடரில் தற்போதைய சம்பியன் ஆனந்த் நேற்று ரஷ்ய வீரர் எவ்கெனி பரீவை தோற்கடித்து முன்னிலைபெற்றார்.

ஹொலண்ட்டில் உள்ள விஜ்க் ஆன்ஜி நகரில் கோரஸ் செஸ் சம்பியன்ஷிப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில், நேற்றுமுன்தினம் நடந்த எட்டாவது சுற்றுப் போட்டியில் இந்திய வீரர் விஸ்வநாதன் ஆனந்தும், ரஷ்ய வீரர் எவ்கெனி பரீவும் மோதினர்.

இதில் 49 ஆவது நகர்த்தலில் ஆனந்த் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார். இந்தத் தொடரில் இவர் பெறும் மூன்றாவது வெற்றி இது. இதன்மூலம் ஆனந்த் 8-போட்டிகளில் 6 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கின்றார்.

இங்கிலாந்தின் மைக்கல் அடம்ஸ் 5.5 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும், ஹங்கேரியின் பீட்டர் லெகோ 5 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளனர்.

# தென்னாபிரிக்க அணியில் குளூஸ்னர் மீள இணைப்பு



(டேர்பன்)

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக நடைபெறவுள்ள ஒருநாள் போட்டியில் லான்ஸ் குளூஸ்னர் தென்னாபிரிக்க அணியின் 14 ஆவது வீரராக இணைக்கப்பட்டுள்ளார்.

சகலதுறை ஆட்டக்காரரான 32 வயதுடைய குளூஸ்னர் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் தென்னாபிரிக்க அணியிலிருந்து நீக்கப்பட்டார். இதனால் தனது உழைப்பைக் கெடுத்ததாகக் கூறி சட்டநடவடிக்கை எடுக்கப் போவதாக அந்த நாட்டு கிரிக்கெட் சபைக்கு எச்சரிக்கை விடுத்தார்.

தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஸ்மித் - குளூஸ்னரின் நியமனம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், குளூஸ்னர் மிகநீண்ட இடைவெளிக்கு பின் அணிக்கு திரும்பியுள்ளார். இவர் சகல தகுதிகளுடனும் இருப்பதாலேயே இந்த வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

நிச்சயமாக இவர் நிறைந்த தகுதியைப் பெற்றுள்ளார். ஆனாலும், ஒருநாள் போட்டிகளில் பத்து ஓவர்களும் பந்து வீசும் தகுதியைப் பெற்றிருக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

# கூட்டணியின் வியூகங்கள் ; கருணாநிதி - ராமதாஸ் பேச்சு

(சென்னை)

தி.மு.க தலைவர் கருணாநிதியை பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் சந்தித்து- நாடாளுமன்ற தேர்தல் தொகுதிப் பகிர்வு குறித்து ஆலோசனை நடத்தினார்.

அண்ணா அறிவாலயத்தில் நடந்த இந்தச் சந்திப்பின்போது, தி.மு.க தரப்பில் அன்பழகன், ஸ்டாலின், துரைமுருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

ராமதாசுடன் பா.ம.க தலைவர் ஜி.கே.மணியும் உடனிருந்தார். இரு தரப்பினரும் சுமார் அரைமணி நேரம் பேச்சு நடத்தினர்.

கடந்த 12 ஆம் திகதி தி.மு.க கூட்டணியில் சேர்ந்த பின்னர், கருணாநிதியை ராமதாஸ் சந்திப்பது இது இரண்டாவது முறையாகும். கூட்டணியில் பா.ம.கவுக்கு 5 முதல் 6 இடங்கள் வழங்கப்படும் என்று தெரிகிறது.

கூட்டத்திற்குப் பின் நிருபர்களிடம் பேசிய ராமதாஸ், தேர்தல் வியூகம் பற்றித்தான் பேசினோம், இடப்பகிர்வு குறித்துப் பேசவில்லை என்றார். ஆனால் இருதரப்பினரும் இடப்பகிர்வு பேச்சு நடத்தியதாக அறிவாலய வட்டாரங்கள் தெரிவித்தன

## வைகோ வழக்கு விவகாரம்

# தமிழக அரசின் மனு மீதான தீர்ப்பு நாளை வெளியாகும்!


வைகோ, நக்கீரன் கோபால் மீதான பொடா வழக்கை ஆய்வு செய்ய எதிர்ப்புத் தெரிவித்து, தமிழக அரசு தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பு நாளை வழங்கப்படும் என்று பொடா மனு ஆய்வுக் குழு நீதிபதி சகாரியா அறிவித்தார்.

தமிழ்நாட்டில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, நக்கீரன் ஆசிரியர் கோபால் பழ.நெடுமாறன் உட்படப் பலரை தமிழக அரசு பொடா சட்டத்தில் கைதுசெய்தது.

பொடா சட்டத்தைத் தவறாக பயன்படுத்தி இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அதுபற்றி விசாரிக்க மத்திய அரசு நியமித்த பொடா மறு ஆய்வுக் குழுவிடம் முறையிடப்பட்டது.

வைகோ உட்பட பொடா சட்டத்தில் கைதானவர்கள் பற்றிய ஆவணங்களை தமிழக அரசிடம் நீதிபதி சகாரியா கேட்டார். ஆவணங்களை ஒப்படைக்க பலமுறை அவகாசம் கொடுத்தும், தமிழக அரசு கொடுக்காமல் காலம் கடத்திவந்தது. இதற்கிடையில் - வைகோ, நக்கீரன் கோபால் போன்றவர்கள் மீதான பொடா வழக்குகளை விசாரிக்க, மத்திய அரசின் பொடா மறு ஆய்வு குழுவுக்கு அதிகாரம் இல்லை. தமிழக அரசின் பொடா மறு ஆய்வு குழுவே விசாரிக்கும் என்று நீதிபதி சகாரியா முன் - தமிழக அரசு ஆட்சேப மனு தாக்கல் செய்தது.

இந்தநிலையில், பொடா மறு ஆய்வு குழுவுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளித்து, மத்திய அரசு அவசர சட்டம் பிறப்பித்தது. பிறகு முறையான சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அதற்கு ஜனாதிபதியின் ஒப்புதலும் பெறப்பட்டது.



ஆனாலும், பொடா மறு ஆய்வு குழு விசாரிக்க அதிகாரம் இல்லை என்ற வாதத்தைத் தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்தியது. தமிழக அரசு சார்பில் சட்டத்தரணி வைத்தியநாதன் ஆஜராகி வாதாடினார்.

தமிழக அரசின் ஆட்சேபணைக்கு பதில் அளிக்கும்படி மத்திய அரசை நீதிபதி சகாரியா கேட்டுக்கொண்டார். அதன்படி மத்திய அரசு பதில் மனு தாக்கல்செய்தது.

நேற்றுமுன்தினம் தமிழக அரசின் மனு நீதிபதி சகாரியா முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசு வக்கீல் கே.என்.பட் ஆஜராகி வாதாடினார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி சகாரியா - தமிழக அரசின் ஆட்சேப மனு மீது எதிர்வரும் 23 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என்று அறிவித்தார்.

# மீண்டும் போட்டியிடும் எம்.பிக்கள் அரைவாசிப்பேர் தோல்வியடைவர்!

## ஆய்வு மூலம் தெரியவந்தது

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களில் பாதிப்பேரை மக்கள் விரும்பவில்லை என்று நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் பற்றிய ஆய்வுப் புத்தகம் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு தேர்தல் முடிவிலிருந்து சமீபத்தில் நடந்த தேர்தல் முடிவுகள்வரை அனுப்குப்த் என்பவர் ஆய்வுசெய்து இந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்.

இதன்படி - எம்.பிக்களாக இருப்பவர்களில் பாதிப்பேரை மக்கள் விரும்பவில்லை என்பது தெரியவந்துள்ளது.

1991 இல் நடந்த தேர்தலில் 214 எம்.பிக்களையும், 1996 தேர்தலில் 251 எம்.பிக்களையும் மக்கள் மீண்டும் தேர்ந்தெடுத்துள்ளனர்.

1998 தேர்தலில் அப்போதைய எம்.பிக்களில் 260 பேர்வரை மக்கள் நிராகரித்துள்ளனர். கடந்த 1999 ஆம் ஆண்டுத் தேர்தலில் அப்போதைய எம். பிக்களில் 241 பேர் மக்களால் நிராகரிக்கப்பட்டு தோல்வியடைந்தனர்.

1999 இல் தோற்ற 241 பேரில் 49 பேர் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். மராட்டியத்திலிருந்து 24 பேரும், ஆந்திரா, பீஹாரிலிருந்து தலா 23 பேரும், கர்நாடகத்திலிருந்து 16 பேரும், ராஜஸ்தானிலிருந்து 15 பேரும் தமிழ்நாட்டிலிருந்து 16 பேரும், பஞ்சாப்பிலிருந்து 13 பேரும் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

இதைவிட, 74 தொகுதிகளில் எம்.பிக்களை இரண்டாவது முறையாக மக்கள் தேர்ந்தெடுக்கவில்லை என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. கடந்த 3 தேர்தல்களில் 174 எம்.பிக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளனர். கடந்த 5 தேர்தல்களில் 40 உறுப்பினர்கள் தொடர்சசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வரும் தேர்தலிலும் பாதி எம்.பிக்களை மக்கள் விரும்பமாட்டார்கள் என்றும், எதிர்ப்பு அலை காரணமாக அவர்கள் தோற்கடிக்கப்படுவர் என்று ஆய்வறிக்கையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மிதிவெடி அகற்றுவதற்காக அள்ளப்படும் மண் மீண்டும் அந்தப் பகுதிகளிலேயே பறிக்கப்படும் !

## யாழ்.செயலக மிதிவெடிச் செயற்பாட்டலுவலர்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அகற்றல் செயற்பாட்டிற்காக அள்ளப்படும் மண், மீண்டும் அந்தந்தப் பகுதிகளிலேயே பறிக்கப்படும் என யாழ்.செயலக மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலர் எல்மோ ஆனந்தராஜா தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி அகற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் 'ஹலோட்ரஸ்ட்' நிறுவன வெடிபொருள் அகற்றும் பிரிவினர் விரைவாக யாழ்.நகரப் பகுதியை அண்டியபகுதிகளில் வெடிபொருட்களை அகற்றுவதற்காக, வெடிபொருட்கள் உள்ள காணிகளிலிருந்து சுமார் இரண்டு அடி ஆழமாக மண் தோண்டப்பட்டு அள்ளப்படுகிறது.

அவ்வாறு அள்ளப்படும் மண் - காக்கை தீவு வெளிப்பகுதிக்கு கொண்டுசெல்லப்பட்டு அரிக்கப்பட்டு, வெடிபொருட்கள் புறம்பாக்கப்பட்டு, அவை வெடிக்க வைக்கப்படுகின்றன. இவ்வாறு வெடிபொருட்கள் அகற்றுவதற்காக மண் அள்ளப்பட்ட காணிகள் மிகவும் பள்ளமாகவும், நீர் தேங்கும் நிலையிலும் காணப்படுவதால், அது தொடர்பாக காணி உரிமையாளர்கள் வெடிபொருள் அகற்றும் பிரிவினரிடம் முறையிட்டுள்ளார்கள்.

இதனையடுத்தே அவ்வாறு வெடிபொருள் அகற்றப்பட்ட காணிகளில் இருந்து அள்ளப்பட்ட மண், மீண்டும் அந்தப் பகுதிகளிலேயே கொட்டப்படவுள்ளது. இந்த வேலை அடுத்த மாத முற்பகுதியிலிருந்து ஆரம்பிக்கவுள்ளதாகவும் யாழ்.செயலகத்தில் உள்ள மிதிவெடிச் செயற்பாட்டலுவலக செயற்பாட்டலுவலர் எல்மோ ஆனந்தராஜா தெரிவித்தார். (ப)



புங்குடுதீவில் திறந்து வைக்கப்பட்ட தியாகி திலீபன் மருத்துவமனையில் முதல் நோயாளியை வைத்தியர் வண்ணன் பரிசோதிக்கிறார்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் பெண்ணொருவர் காயம்

மோட்டார் சைக்கிளும், துவிச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதியதில், இளம் பெண்ணொருவர் காலில் படுகாயமடைந்தார். பலாலி வீதி, அரசடி சந்திக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில், விவசாயத்திணைக்கள ஊழியரான நல்லூரைச் சேர்ந்த பொ.கணகி (வயது 33) என்பவரே காயமடைந்தவராவார்.

வேலைக்குச் சென்று கொண்டிருந்தபோது, வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் இவரை மோதியதாகத் தெரியவருகின்றது. இவரது சைக்கிளும் பலத்த சேதத்திற்குள்ளானது. மோட்டார் சைக்கிளின் சாரதி காயங்கள் ஏதுவுமின்றி தப்பித்துக்கொண்டார். (121)

# மாணவர்கள் தங்கள் கடின உழைப்பால் கல்விமான்களாக உருவாகவேண்டும்

## வலயக் கல்விப்பணிப்பாளர் விக்கினேஸ்வரன் தெரிவிப்பு

மாணவர்கள் தமது கடின உழைப்பின்மூலம் சிறந்த கல்விமானகளாகவும் விற்பன்னர்களாகவும் உருவாகவேண்டும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்தார். யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற மாணவர்களுக்கான உதவிவழங்கும் நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜப்பான் கல்வி கலாசார நிலையம், இலங்கை நிப்போன் கல்வி கலாசார நிலையமூடாக குடாநாட்டிலுள்ள வறிய மாணவர்களுக்கு நிதி உதவி மற்றும் உபகரண உதவி என்பனவற்றை அளித்துவருகிறது. இது தொடர்பான நிகழ்வொன்றே நேற்றுமுன்தினம் யாழ்.மத்திய கல்லூரியில் அதிபர் க.இராசதுரை தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில் - யாழ்ப்பாண சமூகம் கல்விப் பாரம்பரியத்தைத் தனது உயர்ந்த சொத்தாகக் கருதிக் கட்டிக்காத்து வந்த சமூகம் ஆகும். கல்வியினூடாக மட்டுமே சமூக நாட்டுப்பற்றுணர்வை திறம்பட வளர்க்கமுடியும். மாணவர்கள் தமது கடின முயற்சியினாலும், உழைப்பினாலும் எதிர்காலத்திலே சிறந்த கல்வி மான்களாக உருவாகவேண்டும். கடின உழைப்பிற்கு நாம் ஜப்பான் நாட்டவரகளை உதாரணமாகக் கொள்ள முடியும்.

ஜப்பான் சந்தித்தது போன்ற பாரிய அழிவுகளை உலகில் எந்த நாடும் சந்திக்கவில்லை. அணுகுண்டினால் அழிவடைந்த ஜப்பான் - இன்று பொருளாதார, கைத்தொழில், கல்விதுறையிலே உலகிலே முக்கிய இடம் வகிக்கின்றது. இதற்குக் காரணம் அந்த நாட்டு மக்களின் விடாமுயற்சியும், கடின உழைபபுமே ஆகும்.

இதனை உதாரணமாக கொண்டு நாமும் முன்னேறவேண்டும். எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஜப்பான் ஆற்றும் உதவிகளுக்கு நான நன்றி கூறுவதோடு, பாராட்டுகின்றேன் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் பிரான்சிஸ் அடிகள், இலங்கை நிப்போன் கலை கலாசார நிலைய இயக்குநர் வண.சாந்தசிறி தேரர் உட்பட பலரும் உரையாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# 13 வயதுக்குமேற்பட்ட மாணவர்களுக்கு சமாதான சுலோக அட்டைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

13 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு, சமாதானத்தை அடிப்படையாகக் கொண்ட சுலோக அட்டை போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் - சமாதானத்தை அடிப்படையாகக் கொண்ட சுலோகங்களை அமைத்து, முழுப் பெயருடன், பாடசாலை முகவரியையும் அதிபரினால் உறுதிப்படுத தி - மாசி 10 ஆம் திகதிக்கு முன்னர் சிவஸ்ரீ ப.சிவலோக நாததேசிகர், இலங்கை சர்வமத சமாதான அமைப்பு, ஸ்ரீ ராமலிங்கேஸ்வரன் ஆச்சிரமம், அராலி தெற்கு, வட்டுக்கோட்டை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இந்த சமாதான சுலோக அட்டை போட்டி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளுக்கும் தனித்தனியாக நடைபெற்று, ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களையும் பெறும் போட்டியாளர்களுக்கு முறையே 5 ஆயிரம், 3 ஆயிரம், 2 ஆயிரம் பணப்பரிசு வழங்கப்படவுள்ளது. (58)

# சின்னஞ்சிறு செய்திகள்

### தெருக்கூத்து

குடாநாட்டின் பல பாகங்களிலும் 'இரத்த வாடையில் கலந்து தென்றல்' எனும் தெருக்கூத்து நடாத்தப்பட்டுவருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்பு பிரிவினரின் அனுசரணையோடு, கலைத்தாய் மன்றக் கலைஞர்களே இந்த நாடகத்தை நடாத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பொ.செ.ரகுவினால் நெறிப்படுத்தப்படும் இந்தத் தெருக்கூத்து, இன்றைய சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பான கருத்துக்களை மக்கள் மத்தியிலேயே எடுத்துச் சொல்லிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### தடியடிக்கு இலக்காகி குடும்பஸ்தர் காயம்

தடியடிக்கு இலக்காகி படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் - யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அரியாலை யூதா வீதியைச் சேர்ந்த சிவநாதன் வசிக்குமார் (வயது 25) என்பவரே தடியடிக்கு இலக்கானவராவார்.

கட்டடத் தொழிலாளியாகப் பணியாற்றும் இவர், நேற்றுமுன்தினம் காலை வேலைக்கு செல்லும் வழியில் இடைமறிக்கப்பட்டே தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டார். மூனறுக்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட குழுவொன்றே இவரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (121)

### ஓய்வூதியர்கள் மீள்பரிசீலனை

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியர் மீள்பரிசீலனை நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளது என நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

அரியாலைப் பகுதி ஓய்வூதியர்களுக்கான மீள்பரிசீலனை நேற்று அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. நல்லூர் பிரதேசசெயலர்பிரிவுக்குட்பட்ட ஏனைய பகுதி ஓய்வூதியர்களுக்கான மீள்பரிசீலனை நேற்றும், நேற்றுமுன்தினமும் நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இன்றும் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இந்த மீள்பரிசீலனை இடம்பெறும் என மேலும் தெரியவருகிறது. (ப)

### இலத்திரனியல் பொருட்கள் திருடப்பட்டன

அத்தியடிப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து பெறுமதி வாய்ந்த இலத்திரனியல் பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிய வீதி அத்தியடியைச் சேர்ந்த நடராஜா கவிராஜன் என்பவரது வீட்டிலேயே நேற்றுமுன்தின இரவு ஒரு மணியளவில் இந்தச் சமபவம் இடம்பெற்றுள்ளது. திருட்டு நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை வீட்டுக்காரர் உறக்கத்தில் இருந்தாகவும், பின் விழித்துக்கொண்ட போது திருடர்கள் தப்பியோடி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டுக்காரர் விழித்துக்கொண்டமையால் மேலும் திருட்டுப் போகாமல் தடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### சாவகச்சேரி வணிக மன்ற வெள்ளி விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வணிகமன்றத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. வணிகமன்றத்தின் தலைவர் பி.என். சற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், பிரதம விருநதினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாகப் பிரதேசசெயலர் செ.ஸ்ரீனிவாசன், சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை அதிகாரி ச.அம்பிகைபாகன், டிறிபேக் மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். இந்த விழாவில தெரிவுசெய்யப்பட்ட ஒன்பது மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### புதிய வீதி திறப்பு விழா

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தால் நீர்ப்பாசனத் திணைக்கள நிதியுதவியுடன் அமைகப்பட புதிய வீதியொன்றினதும், இரு பாலங்களினதும் திறப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

விவசாய சம்மேளனத் தலைவர் க.முதலியார் தலைமையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், நீர்ப்பாசன மற்றும் விவசாயத் திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அன்றையதினம் விவசாய சம்மேளனத்திற்கான புதிய நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்படவுள்ளது. (44)

# நிமலராஜன் கொலை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலை தொடர்பான விசாரணைகளுக்காகக் குற்றப்புலனாய்வு பொலிஸ் அதிகாரி ரஞ்சித் டி சில்வாவை நீதிமன்றில் ஆஜராகி, முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் நடைபெற்ற விசாரணைகளின் போதே இந்த உத்தரவு பிறப் பிக்கப்பட்டது. நிமலராஜனின் கொலை தொடர்பான விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கையையும் மன்றில் சமர்ப்பிக்கும்படி இது தொடர்பான தகவலை குற்றப் புலனாய்வு பொலிஸ் அதிகாரிக்கு அறிவிக் கும்படியும், யாழ்.பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை, இந்தக் கொலையுடன் தொடர்புடையவரென சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட காராளசிங்கம் சிந்துபரன், மைக்கேல் கொலன ஆகிய இருவரும் நேற்று முன்தினம் மன்றில் ஆஜராக முடியாயாமைக்கு மருத்துவச் சான்றிதழை சமர்ப்பித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச)

# மீளக்குடியமர்ந்த 300 குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்க அனுமதி

யாழ்.பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பத்து கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் மீளக்குடியமர்ந்த 300 குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவுக்கான அனுமதி கிடைத்திருப்பதாக யாழ்.பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜே/62, ஜே/64, ஜே/68, ஜே/70, ஜே/72, ஜே/74, ஜே/75, ஜே/76, ஜே/77, ஜே/88 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியமர்ந்த 300 குடும்பங்களுக்கே 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவைப் பெறவுள்ள குடும்பங்கள் - தமது கிராம சேவையாளர் ஊடாக பெயர்களை உறுதிப்படுத்திக்கொள்வதுடன், எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.பிரதேச செயலகத்திற்குச் சமுகமளித்து, தம்மைப் பிரதேசசெயலர் அலுவலகத்தில் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தம்மை உறுதிப்படுத்த வருவோர் - தமது அடையாள அட்டை, குடும்ப அட்டை உட்பட சகல ஆவணங்களையும் தம்முடன் எடுத்துவருமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ப)

### பிரதேசசபை ஊழியர் பொதுக்கூட்டம்

யாழ்.பிரதேச செயலக ஊழியர்களுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் யாழ். பிரதேச செயலகத்தில், பிரதேச செயலாளர் செந்தில்நர்த்தனன் தலைமையில் இடம்பெறவுள்ளது.


இந்த நிகழ்வில் அனைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களையும், ஊழியர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ப)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்



பெயர் : தே.சங்கவி
முகவரி : துன்னாலை, கரவெட்டி.




# பரம்பரைத் தொழில் என்றபடியால் சிலைகளை இலகுவாக வடிக்க முடிகிறது



வே.வேணுகோபால்

வே.வேணுகோபால் ஆச்சாரியார் வாழ்க்கை ஓட்டத்தில் ஒன்றாகிப்போன, வேலைத்திட்டத்தில் வளர்ச்சி கண்டு இன்று பல தொழிலாளர்களையும் புதிதாக உருவாக்கியிருக்கின்றார். யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் சிவன் கோவிலுக்கு அருகாமையில் சிறிய ஓர் இடத்தில் உருவச் சிலைகளை அமைக்கும் நிலையம் ஒன்றினை இயக்கி வருகின்றார்.

1948 ஆம் ஆண்டிலிருந்து இதேவேலையைச் செய்து வருகின்றார். அவருடன் சில மணிநேரம் தொழில் சம்பந்தமாகவும் - அதில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக் கேட்டறியச் சென்றேன். இந்தத் தொழிலினைப் பரம்பரை பரம்பரையாக மேற்கொண்டு வருகின்றார்.

போராட்ட சூழ் நிலை காரணமாக வீழ்ச்சிகண்ட இந்தத் தொழிலானது, மீண்டும் வளர்ச்சி கண்டு முன்னைய காலங்களில் எப்படி வளர்ச்சி இருந்ததோ, அதேபோல்தான் இப்பவும் இருக்கின்றது. வேறுதொழில் தெரியாதபடியாலும், பரம்பரையாக பழகி வந்தினாலும் இந்தத் தொழிலினைத் தொடர்ந்தேன். குடும்ப சூழ்நிலை வேறு தொழிலுக்குச் செல்வதற்கு இடம்கொடுக்காததால், அன்றாட தேவைகள் கருதியும் இதனை தொடர்ந்தேன். பழக்கப்பட்ட தொழிலானபடியால், கஷ்டமும் இல்லாமல் இலகுவாகச் செய்யமுடிகின்றது. இன்றைய காலங்களில் கூடுதலாகக் கோயில்கள் கட்டும் வேலைகள் நடைபெறுவதால், சிலைகள் வடிக்கத் தொடர்ந்தும் வேலைகள் தருவார்கள். ஒருவேலையை முழுமையாகப் பூர்த்திசெய்ய நீண்ட நாட்கள் எடுக்கும். இரவு பகல் என்றில்லாமல் தொடர்ந்தும் வேலைகளைச் செய்யவேண்டும்.

கோயில் அலங்காரப் பொருட்களான மணிகள், விக்கிரகங்கள், கொடிமரங்கள், கலசம், திருவாசிகள், குத்துவிளக்கு போன்ற பொருட்களை நான் உருவாக்குகின்றேன்.

ஆனால், இந்தத் தொழிலுக்கு காலநிலையும் காரணமாக அமைகின்றது. அதாவது, வெயில் காலம்தான் உறுதுணையாக நிற்கின்றது. மழை காலங்களில் செய்ய முடியாமல் ஈரத்தன்மை உள்ளதால், வார்த்து காய வைப்பது என்பது முடியாத காரணமாகும். இதனால் மழைகாலம் வருவதற்கு முதலே வெயில் காலத்தில் பல பொருட்களை வார்த்து காயவைத்து விட்டு, பின்பு மழைகாலத்தில் சும்மா இருக்காமல் ஒவ்வொரு வடிவங்களில் செய்யவேண்டும்.

இந்தத் தொழிலை முழுதாகப் பழகிவர ஐந்து வருடங்கள் தேவைப்படும். இன்றைய கால இளைஞர்கள் பொறுமை இழந்தவர்களாக இருக்கிறார்கள். பலர் வருபவர்கள் இடையில் விட்டுவிட்டு போய்விடுவார்கள். அவ்வளவுக்கு இந்தத் தொழில் கஷ்டமாகத்தான் இருக்கின்றது. இன்றைய காலகட்டத்தில் தொழில்சார் சம்பந்தமான கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டதனால், இலகுவாக எதனையும் செய்யமுடியும் இன்றைய கால இளைஞர்கள் இத்தொழிலை விரும்புவதில்லை.

பழகிய தொழிலாக இருப்பதாலும், பரம்பரை தொழிலாக இருப்பதனாலும்தான் இதனைத் தொடர்கின்றேன். தொழிலைத் தொடர்ந்து மேற்கொள்ளுவதற்கான எந்தவித உதவியும் எந்த நிறுவனமும் செய்வதுமில்லை. மொத்தத்தில் வளர்ச்சி காணாத தொழிலாகத்தான் இருந்துவருகின்றது. இந்தத் தொழிலுக்குச் சமுதாயத்தில் பெரிதாக அங்கீகாரம் கிடைக்கவில்லை. முன்னைய காலத்தில் எப்படி எந்தெந்த செய்முறைகளில் செய்து வருகின்றோமோ, அதேபோலதான் இப்பவும் செய்து வருகின்றோம்.



செய்முறை - அடிப்படைப் பொருளியில் மண் முக்கியமானது. மற்றையது தேன், மெழுகு, குங்குலியம். அதையும் சரிக்குச் சமனாகச் சேர்த்து உருக்கி, பதமாகச் சேர்த்ததற்குப் பிறகு, அதை நெருப்பில் சூடுகாட்டினால் உருகிறபதம் வந்துவிடும். கொஞ்சம் இளகிற தன்மையில் வந்தபிறகு, எங்களுடைய அளவு கணக்கிலே விக்கிரகம் செய்வதென்றால் அல்லது பிள்ளையாரைப் பிடிப்பதென்றால் அந்த அளவினை எடுத்து அடியோலையில் அளவாக எடுத்து, காலைத் தனித் தனியாகவும் செய்து, பின்பு கைகளை தனித்தனியாகச் செய்து, எல்லாவற்றையும் தீர்ந்துபோட்டு முழு வேலையையும் முடித்து அதை ஒட்டவேண்டும்.

அதன் பின்னர் களிமண்ணை நல்ல மென்மையாய் அரைச்சு அதற்கு குரு மண்ணும்கலந்து வெடிக்காத பதத்திலே அதனையும் சேர்த்து மெழுகுக்கு மேலே கட்டவேண்டும். விக்கிரகம் இரண்டு இஞ்சி மெழுகினைவிட கட்டிப்போட்டு அதற்குப் பிறகு மெழுகினை எடுக்கக்கூடிய அளவிலே தாள் என்ற தொன்று இருக்கின்றது. அதை மெழுகிலே வைத்து ஒட்ட வேண்டும்.

மண் எல்லாம் நல்லாய் காய்ந்த பிறகு, இரும்புத்தகட்டால் மூடவேண்டும். வெடிக்காமல் தாள் என்று சொன்னேனே அதை வைத்து தேங்காய் மட்டை நிறையப்போட்டு சூடாக்கி முழுக்க ஊருக்கி எடுக்கவேண்டும். வெளியே பிறகு அதை திருப்பி நல்லாய் சூடாக்கி உலை என்று சொல்லுகின்ற குகை இருக்கின்றது - அதிலே வைத்து ஐம்பொன், செம்புகள், ஈயம் எல்லாம் அளவாகப்போட்டு உருக்கி, இதனுடைய சூடையும் அந்த விக்கிரகத்தில் அந்த கருவையையும் சூடாக்கும்போது சரியான அளவுப்பதம் தெரியும். அதற்குப் பிறகு இந்த விக்கிரகத் தாளிலே அதனை உருக்கி ஊற்ற வேண்டும்.

இந்த ஐம்பொன் உலோகத்தை உருக்கி ஊற்றிய பிறகு, இருபத்துநான்கு மணித்தியாலம் சென்றபிறகுதான், ஆறி இருக்கும். அதற்குப் பிறகு மண்ணினை உடைச்சு இரும்புத் தகடு எல்லாம் கழட்டிப்போட்டால், ஐம்பொன் விக்கிரகமாக இருக்கும். அதன் பின்புதான் - உளிகள், வெட்டிரும்புகள், சுட்டியல் போன்ற கருவிகள் கொண்டு கொத்தி வெட்டவேண்டும். வெட்டின தடங்கள் இல்லாமல் செய்வதற்கு நன்றாகத் தேய்க்க வேண்டும். பிறகு தேய்த்த தடங்கள் இல்லாமல் சீவவேண்டும். சீவின தடங்கள் இல்லாமல் செய்தவதற்கு சான்ட் பேப்பர் போட வேண்டும். முக உருவத்தினை ஏற்படுத்தி, அதில் கண் உண்டாக்கி, நாகசம் போட்டு அதற்குப் பிறகு புளிக்காப்புப் போட்டு பீடத்தில் இருத்தவேண்டும் என்று சொல்லி முடித்தார்.

இதன் பின் 31/2 அடி உயரத்தில் சிலை ஒன்று செய்திருக்கின்றோம். செய்ததொன்று உள்ளே இருக்கின்றது என்று சொல்லி, கூட்டிச்சென்று காட்டினார். பார்த்து விட்டு விடைபெற்று வந்தோம்.

**நேர்காணல்:- செல்வா**

---

# வாரம் ஒரு சிறுதொழில்

## சைக்கிள் சக்கர பிரஷ் தயாரிக்கும்

சைக்கிள் முன்பின் குடங்களைத் துடைப்பதற்கு இந்த வட்டமான பிரஷ் பயன்படும்.

இந்த பிரஷை மாட்டிவிட்டால், சக்கரம் சுழலும்போது இந்த பிரஷும் சுழன்று குடத்தில் சேரும் தூசு, மண் போன்றவற்றை உடனுக்குடன் துடைத்துச் சுத்தம்செய்து விடும். இந்த வகையான பிரஷ்களைக் கற்றாளை நாரைக் கொண்டே தயாரிக்கலாம்.

சுமார் ஒரு மில்லிமீற்றர் கனமுள்ள கம்பியை வாங்கி, அதனைச் சுமார் 60 cm நீளம் உள்ள துண்டுகளாக வெட்டி வைத்துக்கொள்ள வேண்டும். 35 cm நீளமும் 10 cm அகலமுமுள்ள ஒரு பலகை தயார் செய்து கொள்ளவேண்டும்.

இந்தப் பலகையின் ஒரு மூலையில் சுமார் 2 cm இடைவெளி விட்டு, 4 cm நீளமும் 2 மில்லிமீற்றர் அகலமும் உள்ள இரும்பு ஆணியில் இரண்டை வைத்து மரத்தில் 11/2 cm இறங்கும்படி அடிக்கவேண்டும். பின்னர் 15 cm நீளமும் 1 cm அகலமும் உள்ள வழுவழுப்பான இரண்டு கம்பிகளைத் தயார்செய்துகொள்ளவேண்டும். இந்த விதமான பிரஷ்களை ஒரேநிறத்தில் தயாரிப்பதைவிட, பலநிறம் கலந்து தயாரித்தால் அது பார்வையாக இருக்கும்.

ஆகையால், இதற்குச் சாயமிட்ட நார் வகைகளைப் பயன்படுத்த வேண்டும். மூன்று அல்லது 4 நிறங்களைக் கொண்டு தயாரிக்கலாம். ஒவ்வொரு நிற நாரிலும் தேவையான அளவு எடுத்து, 4 cm நீளம்வரை வெட்டி, ஒரே சீராக ஒரு நிற நாருடன் வேறுநிற நார் கலந்துவிடாமல் ஒருங்காக வைத்துக் கொள்ளவேண்டும்.

வெட்டி வைத்திருக்கும் கம்பியில் ஒன்றை எடுத்து, அதன் இரு முனைகளையும் ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொண்டு இரு கம்பிகளையும் ஒன்றாக இணைத்து கையினால் உருவினால் ஒரு பக்கம் வளைவு உண்டாகும். இந்த வளைவுப் பாகத்தைக் கனத்த இரண்டு கம்பிகளில் ஒன்றை எடுத்து, அதில் சேர்த்து நீளக் கம்பியைப் பிடித்துக்கொண்டு கனத்த கம்பியைச் சுழற்றி வளைவுப் பாகத்தை அடுத்து இரண்டு முறுக்கு ஏறும்படி செய்து, கனத்த கம்பியைப் பலகையில் அடித்திருக்கும் இரண்டு கம்பிகளுக்குப் பின் பக்கமாகக் குறுக்காகவைத்து மெல்லிய இரட்டைக் கம்பியின் இரு முனைகளையும் உறுதியாக மாட்டித் திருகி விடவேண்டும். பிறகு கனத்த கம்பியில் மற்றொன்றை எடுத்து, இரண்டு முனைகளை இணைத்து முறுக்கிய இடத்தில் உட்பக்கமாக வைத்து அதை அப்படியே வைத்து விடவேண்டும். அதன் பின்னர், வெட்டி வைத்திருக்கும் நாரில் கொஞ்சம் எடுத்து, மெல்லிய இரண்டு கம்பிகளுக்கு இடையே நாரின் மையப் பகுதி வரும்படி வைத்து நாரைக் கம்பிகளின் முன்பக்கமாகப் பரவலாக வரும்படி செய்ய வேண்டும்.

நான்கு நிறங்களில் பிரஷ் தயாரிக்க விரும்பினால், கம்பியின் நான்கில் ஒரு பங்குவரை ஒவ்வொரு நிறநாரையும் ஒரே சீராக ஒரே அளவு கனத்தில் பரவலாக வைக்கவேண்டும். கம்பி முழுவதும் நாரைப் பரவலாக வைத்த பின் மெல்லிய கம்பியின் இரு முனை திருகப்பட்ட பகுதியிலுள்ள கனத்த கம்பியைக் கையிலெடுத்து, அதை வலது பக்கமாக மெதுவாகச் சுழற்றி கம்பியில் முறுக்கேறும்படி செய்ய வேண்டும். ஆரம்பத்தில் மெதுவாகச் சுற்றி கம்பியில் முறுக்கேறும்படி செய்து, நாரைச் சிக்கச்செய்யவேண்டும். கம்பி - நாரை இறுக்கப்பற்றிப் பிடித்துககொண்ட பின், கனத்த கம்பியை வேகமாகச் சுழற்றி கம்பியில் முறுக்கேறச் செய்தால், நார் கம்பியில் சிக்கி ஒரு பெரிய திரணையாகச் சுற்றிக் கொள்ளும். பிறகு இரண்டு கனத்த கம்பிகளில் மாட்டியிருக்கும் கம்பியைச் சுழற்றி எடுத்துவிட்டு, நீண்ட மாலைபோல் இருக்கும் இதன் சுற்றுப் பாகத்தை, ஒரே அளவாகப் பார்வைக்கு அழகாக இருக்கும்படி வெட்டிவிட வேண்டும்.

இந்த வேலை முடிந்தபின், மெல்லிய கம்பியின் இரு முனைகளை இணைத்த பாகத்தில் ஒரு கொக்கி போல மடக்கிவிடவேண்டும். இந்தக் கொக்கி மெல்லிய கம்பியின் முன்பகுதியினுள் வளையத்தில் மாட்டி எடுக்க வசதியாக இருக்கவேண்டும்.

எல்லாப் பிரஷ்களையும் ஒரே சீராக வெட்டி, வளைத்து, கொக்கி வளையம் செய்தபின், இந்தப் பிரஷை அழகாக வளைத்து வளையத்தில் கொக்கியை மாட்டிவிடவேண்டும். இப்போது இந்தப் பிரஷ் வட்ட வளையமாக இருக்கும். இவற்றை ஒரு பெரிய கம்பியில் மாட்டி விற்பனைக்கு அனுப்பலாம்.

---

# புகைப்படக் கலை

நீங்கள் ஒரு நிழற்படம் எடுப்பதில் பயிற்சி பெற்ற கலைஞரா? புகைப்படம் எடுக்கும் நிலையத்தினை வைத்து நடத்தும் அளவுக்கு மூலதனம்... வசதி வாய்ப்புக்கள் இல்லையா? வேறு தொழில் கிடைக்காமல் திண்டாடுகிறீர்களா? தொழில் கிடைத்தாலும் ஒருவருக்குக் கீழ் அடங்கி நடக்கும் சுபாவம் இன்றி, சுதந்திரமாக தொழில் நடத்த ஆசைப்படுகிறீர்களா? உங்கள் கலையை அடிப்படையாக வைத்து நீங்கள் ஒரு தொழிலை உருவாக்கிக்கொள்ளலாம்.

ஒரு சாதாரண புகைப்படம் பிடிக்கும் கருவியை மட்டும் வாங்கிக்கொள்ள முயற்சியெடுங்கள்.

கருவிகள் ஆயிரம், இரண்டாயிரம் என்று விலையிருக்கும். தற்காலிக உபயோகத்துக்கான ஓரளவுக்கு தரமான கருவியை ஏறத்தாழ இரண்டாயிரம் ரூபாவுக்கு வாங்கலாம்.

நிறுவனங்கள் புகைப்படக் கருவியினை வாடகைக்கு கொடுத்தால், அதனை வாடகைக்கு வாங்கி தொழிலினை மேற்கொள்ளலாம்.

யாழ்.நகரில் அன்றாடம் செய்திகளில் இடம் பெறக்கூடிய முக்கிய நிகழ்வுகள் நடந்த வண்ணம் உள்ளன. உதாரணமாக தெருக்களில் நடக்கும் பயங்கர விபத்துக்களை குறிப்பிடலாம்.

விபத்து எங்காவது நடைபெற்றதாகக் கேள்விப்பட்ட உடனே, புகைப்படக்கருவியுடன் அந்த இடத்துக்கு விரைந்து, அந்த விபத்து தொடர்பான முக்கியமான காட்சியினைப் படம் பிடித்துக்கொள்ளலாம். முடிந்த அளவு வேகத்துடன் அந்தப் படத்தை அருகிலுள்ள புகைப்பட நிறுவனத்தாரிடம் கொடுத்து, பிரதிபோட்டு பல பிரதிகள் எடுத்து எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பலாம்.

நிகழ்ச்சி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தால், அநேகமாக எல்லாப் பத்திரிகைகளும் நிழல் படங்களை வாங்கிக்கொள்வார்கள். குறைந்தபட்சமாக இரண்டொரு தினசரி ஏடுகளாவது வாங்காமலிருக்கமாட்டார்கள்.

பெரிய பத்திரிகைகளுக்குச் சொந்தமாக நிழற்படம் எடுப்போர் இருந்தாலும், காட்சியின் சிறப்பையும், படம் துரிதமாகவும் கிடைத்திருப்பது கருதியும் நல்ல படங்களைப் பத்திரிகைக்காரர்கள் நிச்சயமாக வாங்கிக்கொள்வார்கள். யாழ்.நகருக்குப் பிரமுகர்கள் வருகை தரும்போதும், அமைச்சர்கள் பங்குகொள்ளும் முக்கிய நிகழ்ச்சிகள், எதிர்கட்சியினர் நடத்தும் போராட்டங்கள் போன்றவற்றைப் படமெடுத்து பத்திரிகைகளுக்கு கொடுத்தாலும் வாங்கிக் கொள்வார்கள்.


முக்கிய அரசியல் தலைவர்கள் பேசும் பொதுக்கூட்டங்களுக்குச் சென்று, அவர்கள் பேசும் பேச்சை படமெடுத்து பத்திரிகைகளுக்குக் கொடுக்கலாம்.

நல்ல படமாக அமைந்தால் பேசிய அரசியல் தலைவர்களும் தங்களுக்கென சில பிரதிகளை வாங்கிக்கொள்வார்கள். இவ்வாறு தங்களிடமிருக்கும் புகைப்படக் கலையை முதலாகவைத்து, நல்ல வருமானத்தைப் பெறலாம்.

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# மாடுகள் சினைப் பிடிக்காமைக்கான காரணங்கள்

பாற்பண்ணைத்தொழில் மூலம் அதிக வருமானம் பெற, கறவை மாடுகள் குறித்த காலத்தில் சினை பிடித்துக் கன்று ஈனவேண்டும். கறவை மாடுகள் குறித்த காலத்தில் சினைபிடிக்காமல் போனால், மாடுகள் அதிக நாட்கள் வறட்டு மாடாக (Dry Cows) இருக்க நேரிடுகிறது. பண்ணையில் பால் உற்பத்தி



குறைந்து, பராமரிப்புச் செலவு அதிகமாகி, பண்ணையின் இலாபம் மிகவும் குறைகிறது. இதற்கு முக்கியமான காரணம் - பசுக்கள் குறித்த காலத்தில் சினைபிடிக்காமல் போவதேயாகும்.

### பராமரிப்பில் குறைபாடு

மாடுகள் சினைபிடிக்காமல் போவதற்கு மிகமுக்கியமான காரணம், பராமரிப்பிலுள்ள குறைபாடுகளே. முதலாவதாக - மாட்டின் சினைத் தருணத்தைச் சரியானபடி கண்டுபிடிக்கத் தவறுதலேயாகும். அதாவது, சினைத் தருணத்தில் இருக்கின்றன என, சினை ஊசி போடக்கொண்டுவரப்படும் மாடுகள் - சரியான சினைத் தருணத்தில் இருப்பதில்லை. பாற்பண்ணையின் முன்னேற்றம் - திறமையான இனவிருத்தித் திறனையே சார்ந்துள்ளது. அதன் மூன்று படிகளான -

1. உயர் இனக் காளையில் இருந்து தரமான விந்தினைச் சேகரித்தல்.
2. நவீன அறிவியல் முறையைக் கையாண்டு, அதனைச் சேமித்து வைத்தல்,
3. பசுக்களையும், எருமைகளையும் சரியான நேரத்தில் செயற்கை முறைக் கருவூட்டல் செய்தல் போன்றன சிறந்தமுறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

இதில் முதல் 2 படிகள் - கால்நடை பராமரிப்புத் துறையினரால் செவ்வனே செயற்படுத்தப்படுகின்றன. மூன்றாவது படியின் வெற்றி - கால்நடை வைத்திருப்போரின் கைகளிலே தங்கியுள்ளது.

சினைக்கு வந்திருப்பதை உடனறிந்து, அதற்குச் செயற்கைமுறைக் கருவூட்டல் செய்வதன்மூலம் சாத்தியமாகின்றது. மாடு சினைக்கு வந்திருக்கும் நேரத்தில், வேறு சொந்த வேலைக்குச் சென்றுவிட்டு, பின் காலதாமதமாகக் கருவூட்டல் செய்தால், மாடுகள் சினைப் பிடிக்காமல்போகும். சினைத் தருணம் பசுக்களில் சுமார் 18 மணிநேரமாகக் காணப்படுகிறது.

சரி, அடுத்ததாக மாடுகளின் சினைத்தருணத்தை எவ்வாறு ஊகித்தறியலாம் எனப்பார்ப்போம். பசுக்கள் சினைத்தருணத்தில் இருக்கும்போது, அடிக்கடி கத்தும், மற்றப் பசுக்களின்மேல் தாவும், மற்றப் பசுக்களை தன்மேல் தாவுவதற்கு அனுமதிக்கும், தீனி உட்கொள்ளாதிருக்கும், கறவை மாடாக இருந்தால் பால் குறையும். அடிக்கடி சிறுநீர் கழிக்கும். பெண் உறுப்பின் வெளிப்புறம் ஈரமாயும், சிவந்தும், வீங்கியும் காணப்படும். வளவளப்பான கண்ணாடிபோன்ற திரவம் பெண்ணுறுப்பிலிருந்து பொசியும்.

### சரியான நேரம்

பசுக்களில் சினை ஊசிபோடச் சரியான நேரம் - சினைத் தருணம் ஆரம்பித்து, 9-24 மணிநேரம் எனப் பலவிதமான ஆராய்ச்சிகள் சான்று பகர்கின்றன. அதாவது, மாடுகள் காலையில் சினைத் தருணத்திற்கு வந்தால், அதேநாள் காலையிலும் சினை ஊசிபோட வேண்டும். இம்முறைப்படி கருவூட்டல் செய்தால், கருத்தரிப்பு விகிதம் அதிகமாக வாய்ப்புள்ளது. முதலில் குறிப்பிட்ட சினைத்தருண அறிகுறிகளை மனதிற்கொண்டு, சரியான நேரத்தில் கருவூட்டல் மிகவும் அவசியம். மேலும், சினை ஊசி போட்டவுடன், அதனைப் பதிவேடுகளில் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

### ஊமைத்தன்மை

சில பசுக்களில் ஊமைச் சினைப்பருவம் காணப்படலாம். அதாவது, மாடுகள் சினைத் தருணத்திலிருக்கும். ஆனால், வெளியே எந்த அறிகுறிகளும் இல்லாதிருக்கும். சினைத் தருணத்தில் ஐயம் ஏற்பட்டால், உடன் உங்கள் மாடுகளைக் கால்நடை மருந்தகம் கொண்டுசென்று பரிசோதித்து, அது சினைத் தருணத்தில் இருக்கிறதா எனத் தெரிந்துகொள்ளலாம்.

### ஓய்வுக்குப் பின்

சினை ஊசிபோடும்போது, மாடுகளை அடித்தலும், மிரட்டுதலும் அல்லது அதிகதூரம் நடத்திச் செல்லுதலும் மாடுகள் சினைபிடிப்பதில் பிரச்சினை ஏற்படுத்துகிறது. அதாவது, மாடுகளை அடித்தாலோ, மிரட்டினாலோ - அதன் உடலில் 'சுட்ரினலின்' எனும் ஓமோன் சுரந்து, கருவுறுதலுக்குத் தேவையான 'ஒட்சிடோரின்' என்னும் ஓமோனைச் செயலிழக்கச் செய்துவிடுகிறது. அதிகதூரம் நடத்திச்சென்று சினை ஊசிபோடவேண்டியிருந்தால், நிழலான ஓரிடத்தில் மாட்டுக்கு ஓய்வு கொடுத்து பின் சினை ஊசி போடவேண்டும்.

### சுற்றுப்புறத் தட்பவெப்பநிலை

ஒரு இடத்தின் தட்பவெப்ப நிலையும் மாடுகளின் இனவிருத்தித் திறனைப் பாதிக்கின்றன. அதாவது சுற்றுப்புற வெப்பமும், காற்றிலுள்ள ஈரப்பதனும் அதிகமாகும் பொழுது மாடுகளின் உடல் வெப்பமும் அதிகமாகிறது. அதனால், மாடுகளின் சினைத் தருணச் செயல்கள் பாதிக்கப்படுகின்றன. சினைமுட்டை சூலகத்திலிருந்து சரியான நேரத்தில் வெளிவராமல் தாமதமாக வருகின்றது அல்லது வெளிவருவதில்லை. அதிக வெப்பம் சினைத் தருண நேரத்தைக் குறைத்து விடுவதால் சரியான நேரத்தில் சினை ஊசிபோட முடிவதில்லை. எனவே, வெப்பம் அதிகமாய் உள்ள காலங்களில் சினைக்கு வந்திருக்கும் மாடுகளை நிழலிலோ, கொட்டிலிலோ கட்டிவைத்துச் சினை ஊசிபோட்ட பின் வெயிலில் மேயவிடாமல் நிழலில் மேயுமாறு கவனித்துக் கொள்ளவேண்டும். மேலும் வெயில் காலங்களில் குளிர்ந்த காலை அல்லது மாலை நேரத்தில் சினை ஊசி போடவேண்டும்.

### தீவனத்தால் ஏற்படுவது.

மாடுகள் சினைப் பிடிப்பதில் அவற்றிற்குள் கொடுக்கப்படும் தீவனம் முக்கிய பங்கு வகிக்கின்றது. அதாவது மாடுகளின் தேவைக்குக் குறைவாகவோ அல்லது சத்துப்பொருள் ஏற்ற விகிதத்தில் இல்லாத தீவனம் முக்கியமாக புரதம், பொஸ்பரஸ், மங்கனீசு, கோபால்ட், அயடீன், இரும்பு மேலும் தேவையான உயிர்ச்சத்துக்கள் குறைவாக அல்லது அறவே இல்லாத தீவனம் கொடுத்து வந்தாலும் கருத்தரிப்புப் பாதிக்கப்படும். மேலும் பூஞ்சணம் பூத்த தீவனங்களை மாடுகளிற்குக் கொடுத்து வந்தாலும், அதன் சினை பிடிக்கும் திறன் மிகவும் பாதிக்கப்படுகிறது. கருவூட்டல் காலத்தில் அதன் தேவைக்குச் சிறிது அதிகமான தீவனம் கொடுத்தால் கருத்தரிப்பு விகிதம் அதிகமாக வாய்ப்பிருக்கிறது.

### நோய்களால் கருத்தரியாமை.

சினைப்பிடிப்பதற்கும், சினைப் பிடித்த பின் கன்று ஈனும்வரை கன்றைப் பாதுகாப்பதற்கும் நல்ல ஆரோக்கியமான கருப்பை மிகவும் அவசியம். கறவை மாடுகளில் "புருசெல்லோசிஸ்" போன்ற நோய்கள் சினைக் காலத்தில் கருவைப் பாதித்து கருச்சிதைவை உண்டு பண்ணுகின்றன. இவ்வாறான கருச்சிதைவுக்குப்பின் சினைப்பிடிக்காமல் போகின்றன. பல கருப்பை நோய்கள் மாடுகளுககு இயற்கை முறை இனச்சேர்க்கையால்தான் வருகின்றன.

எனவே செயற்கை முறைக் கருவூட்டல் செய்வது தான் நல்லது.

### கன்று ஈன்ற பின்...

கருப்பையில் நோயுள்ள மாட்டிற்குச் சினைக் காலத்தில் கண்ணாடி போன்ற வழவழப்பான திரவத்திற்குப் பதிலாக சீழ் அல்லது மஞ்சல் நிறத் திரவம் அறையிலிருந்து வடியும். கருப்பையில் நோய் இருந்தால் சினை ஊசி போடுவதில் பலனில்லை. அவை சினைப் பிடிக்காது. அதற்கு மருத்துவமனைக்குக் கொண்டுசென்று தகுந்த வைத்தியம் செய்யவேண்டும்.

# இனிப்பின் உறைவிடம் கரும்பு

(சென்றவாரத் தொடர்ச்சி)

4 ஆவது, 6 ஆவது மாதமும் இதேயளவில் உரம் அளிக்கப்படும். மொத்தமாக 20 வண்டி மாட்டெரு, 10 000 இறாத்தல் பசுந்தாள், 750 இறாத்தல் பிண்ணாக்கு, 100 - 150 இறாத்தல் $(NH_4)_2SO_4$ பாவிக்கப்படும்.

### விதைக் கரணைகளின் பெருக்கம்

கரும்பு பயிரிடும் ஒவ்வொரு விவசாயியும் ஒரு நாற்றுமேடையை வைத்திருப்பது மிகப்பொருத்தமாகும். கரும்பு பயிரிடும் நிலத்தில் ஏறத்தாழ 1/50 பங்கு நாற்றுமேடைக்கு என ஒதுக்கவேண்டும்.

30 - 40 அடி x 4 அடி x 1 அடி விஸ்தீரணத்தில் நாற்று மேடையை அமைக்கவேண்டும். இந்த மேடுகளைச் சுற்றி வடிகால்கள் உண்டு. மேட்டின் மேல் மண்ணைக்கொத்திச் சிறியளவு எருவை இட்டுக் கிளறிச் சமப்படுத்தவேண்டும். இவ்விஸ்தீரணமுள்ள நாற்று மேடை ஏறத்தாழ 10 ஏக்கர் விஸ்தீரணத்திற்குப் போதுமாகும். கரும்பு அறுவடையின்போது பெறப்படும் நுனிக்கரும்புகளை 1 அடி விஸ்தீரணத்தில் வெட்டி மேட்டின்மேல் அருகருகாக நெருக்கமாகப் படுக்கவைத்து, மண்ணை கரும்புத் துண்டுகளின் மேல் தூவுவார்கள். பிறகு இதன்மேல் சாணி கரைத்த நீரைத் தெளிப்பார்கள். இதற்குமேலே வைக்கோல் போட்டு இலேசாக மூடிவைப்பார்கள். கனத்த மழைபெய்தால் வைக்கோலை எடுத்துவிடுவது நல்லது.

### கரும்பிலிருந்து பெறப்படும் பிற பக்கவிளைவுகள்

சக்கைதான் ஆலையின் முதற்கழிவுப் பொருள். இதை எரிபொருளாகவும், விலங்குணவாகவும் பாவிக்கலாம்.

கருப்பஞ்சாறு புளிப்புத்தட்டாமலிருப்பதற்காகச் சிறிதளவுக்கு சுண்ணாம்பு சேர்க்கப்படுகிறது. அப்போது சாறுதெளிந்து அழுக்குகளெல்லாம் திரண்டு அடியில் சேரும். இந்தச் சேர்ந்த கலவையை வடித்தெடுத்து, அதிலிருந்து மெழுகு எடுக்கப்படும். அல்லது இதை உரமாகவும் பாவிக்கலாம்.



சர்க்கரை உற்பத்தியின் போது படிகரூபமான சக்குரோசும் பாகுத்தன்மையான குளுக்கோசும் பிரியும்போது 'மொலாஸ்ஸஸ்' எனும் சக்கைப்பொருள் உண்டாகின்றது. இதிலிருந்து தித்திப்பு மிட்டாய்கள், பலவிதச் சாராயங்கள், ஈஸ்ட் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் மொலாஸ்ஸஸ் ஆனது, கால்நடை உணவாகவும், களர்பூமிகளைத் திருத்தவும் உதவுகிறது. ஒரு தொன் சக்கரை தயாராகும்போது, 44 தொன்கள் மொலாஸ்ஸஸ் கிடைக்கிறது. ஆனால், யாழ்ப்பாணமோ அல்லது வன்னிப் பிராந்தியமோ வெல்லத் தேவைக்குத் தென் பகுதியையே முற்றுமுழுதாகத் தங்கியுள்ளது. பனம்வெல்லம் ஓரளவு உற்பத்தி செய்யப்பட்டாலும், அதற்கான மவுசு மிகமிகக் குறைவாகவே உள்ளது. இங்குள்ள மக்களின் வெல்லத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியளவிற்குச் சீனித்தொழிற்சாலைகள் இங்கில்லை. சீனித் தொழிற்சாலைகள் இங்கில்லாதபடியால், இங்குள்ள விவசாயிகளுக்கு கரும்புச் செய்கையில் அவ்வளவிற்கு நாட்டமில்லை. கரும்பு இங்கு சாதாரணமாக சாப்பிடுவதற்கும், ஆலயத்தேவைகளுக்கும் மட்டுமே பாவிக்கப்படுகிறது.

இந்த சமாதானச் சூழ்நிலையைப் பாவித்து எத்தனையோ தொழிற்சாலைகளும், நிறுவனங்களும் இங்கு காலூன்றியுள்ளன. ஆனால், சீனித்தொழிற்சாலை எதுவும் இன்றுவரை உருவாக்கப்படவில்லை. அவ்வாறு ஓர் சீனித்தொழிற்சாலை அதற்கான மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இடவசதியுடன் உருவாக்கம் பெறுமேயானால், எமது நாட்டுப் பொருளாதாரம் ஓர் தன்னிறைவுப் பொருளாதாரமாகக் கட்டியெழுப்பக்கூடியதாக இருக்கும்.

கரும்பின் விளைச்சல், அதற்குக் கிடைக்கும் நீரிலேயே பிரதானமாகத் தங்கியுள்ளது. யாழ்.குடாவின் பயிர்ச்செய்கையானது முற்றுமுழுதாக மழைநீரிலும், நிலத்தடி நீரிலுமே தங்கியுள்ளது. ஆனால், அதிலும் கரும்பிற்கு ஆகக்கூடுதலான நீர் தேவை எனப் பார்தோமல்லவா? இவ்வளவு நீரிற்கும் எங்கே போவது? கிடைக்கும் நீர்ரை வினைத்திறனாகப் பாவிக்கமுடியுமா? இவ்வாறான கேள்விகளுக்கு விடையாக - இஸ்ரேல் நாட்டின் பயிர்ச்செய்கையே நல்ல தீர்வாக அமையும். எந்தப் பயிரும் விளையமுடியாத பாலைவனப் பிரதேசத்தில் கூட எம்மால் எதையும் சாதிக்கமுடியும் என்பதை இஸ்ரேலியர்கள் உலகிற்கு நிருபித்துக் காட்டியுள்ளனர்.

அந்தவகையில் பிரதானமாக தென்னை விளையும் பளை பிரதேசத்தில்கூட சொட்டு நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்தி கரும்பு பயிரிடலாமா என்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் கரும்பில் இருக்கும் சுக்குரோசின் அளவானது 'பிறிக்ஸ்' பெறுமதியின் அடிப்படையில் துணியப்படுகிறது. விவசாயிகளிடம் கரும்பை கொள்வனவு செய்யும்போது, இந்த 'பிறிக்ஸ்' பெறுமதிக்கேற்பவே விலை தீர்மானிக்கப்படுகிறது. அதாவது குறிக்கப்பட்ட 'பிறிக்ஸ்' பெறுமதிக்கு ஒரு டன்னுக்கு இவ்வளவு விலையும் மேலதிகமான ஒவ்வொரு பெறுமதிக்கு அந்தத் தொகை அதிகரிப்பதாகவும் இருப்பின், இத்தொகை விவசாயிகளுக்குப் போனஸாக அமைவதுடன், அவர்களின் உற்பத்தியையும் நல்ல தரமுள்ளதாக மாற்றும் என்பதில் இரண்டு கருத்திற்கு இடமில்லை.

எவ்வாறாயினும் கரும்பு சம்பந்தமான ஆராய்ச்சிகளைத் துரிதப்படுத்துவது மட்டுமல்லாமல், சீனித்தொழிற்சாலைகளும் நிறுவப்படுமானால், கரும்புற்பத்தி கணிசமாக உயரும் என்பதில் ஐயமில்லை.

**தகவல் தொடர்பு மையம்**
**(மாணவர் பகுதி)**
**விவசாயபீடம்.**

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 65/= | 60/= | 70/= | 70/= | 60/= | 60/= | 40/= |
| வெண்டிக்காய் | 25/= | 40/= | 45/= | 30/= | 25/= | 30/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 65/= | 60/= | 65/= | 80/= | 70/= | 70/= | 70/= |
| கத்தரிக்காய் | 35/= | 70/= | 70/= | 50/= | 30/= | 35/= | 40/= |
| பாகற்காய் | 50/= | 60/= | 60/= | 40/= | 60/= | 45/= | 40/= |
| கரட் | 30/= | 40/= | 50/= | 30/= | 55/= | 25/= | 40/= |
| பீற்றூட் | 30/= | 45/= | 35/= | 40/= | 40/= | 30/= | 60/= |
| வெங்காயம் | 42/= | 30/= | 40/= | 45/= | 50= | 45/= | 50/= |
| பச்சை மிளகாய் | 60/= | - | 120/= | 70/= | 70/= | 65/= | 60/= |

உளவியற் கட்டுரை

Dr.சி.யமுனானந்தன்

# வன்முறைகள், மனவடுக்கள் இன்றைய சிறுவர்களில் ஏற்படுத்தும் தாக்கங்கள்

வன்முறையினை - அது உருவாக்கபபடும் நிலையில் மூன்று மட்டங்களாக வகைப்படுத் தலாம். முதலாவது - சமூக மட்டத்தில் பாரியளவில் நிகழ்த்தப்படும் வன்முறைகள். இது முதன்நிலை வன்முறை எனவும் அழைக்கப்படலாம். யுத்தங்கள் - முன்னிலை வன்முறைக்குள் அடங்கும்.

அடுத்ததாக, இடைநிலை வன்முறைகள் அல்லது இரண்டாம்நிலை வன்முறைகளா கும். இதனுள் குழுநிலை வன்முறைகள் அடங்கும். பாதாள உலக நடத்தைகள், பல் கலைக்கழக மாணவர்களின் பகிடிவதை என்பன இரண்டாம்நிலை வன்முறைக்குள் அடங்கும். மூன்றாம்நிலை வன்முறைகள் அல்லது நுன்நிலை வன்முறைகளில் குடும்பப்பிணக்கு, தனிமனித உறவுச்சிக்கல் கள் என்பன அமைகின்றன.



வன்முறை உருவாக்கப்படும் தன்மை யைக்கொண்டு - நேரடியான வன்முறைகள் எனவும், மறைமுகமான வன்முறைகள் என வும் வகைப்படுத்தலாம். சுகாதார ஊழியரது கடமைப்புறக்கணிப்புக்கள் இரண்டாம்நிலை மறைமுக வன்முறையாகும். அடுத்து வன் முறைகள் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தை வைத்து, உடனடியாக பாதிப்பைக் கொண்டு வரும் வன்முறை என்றும், தொக்குநிக்கும் வன்முறை என்றும் வகைப்படுத்தலாம்.

வன்முறைகள் உருவாக்கப்படும் காரணி களின் அடிப்படையில் - அரசியல் காரணி யுடைய வன்முறைகள், இனவேறுபாட்டுடன் தொடர்புடைய வனமுறைகள், சமய வேறு பாட் டுடன் தொடர்பு டைய வன் முறைகள், பொருளாதாரக் காரணிகளுடன் தொடர்புடைய வன்முறைகள் என நான்கு வகைகளாகப் பிரிககலாம்.

எனவே, வன் முறைகளை ஆராயும்போது மேற்கூறிய 48 வகையான (3x2x2x4) வன் முறைகளை வகைப்படுத்தலாம். ஒவ்வொரு வன் முறையினையும் நான்கு எண்களினால் வகைப்படுத்தலாம்.

சிறுவர் பற்றிச் சிந்திப்போர் - மேற்கூறிய 48 வகையான வன்முறைகள் உருவாகாது இருத்தல் பற்றியும், மேற்கூறிய வகையான வன்முறைகள் வரும்போது, அதனை ஆவ ணப்படுத்தித் தணித்தலை மேற்கொள்ள லாம். மாறாக அறிக்கைகளை மட்டும் வெளி யிடல் சிறந்ததல்ல.

இந்த வன்முறைகள் ஒன்றோடொன்று செல்வாக்குச் செலுத்துகின்றன. இவை சமூகமட்டத்திலும், தனிமனிதரிலும் பாதிப்புச் செலுத்துகின்றன. தனிமனித பாதிப்பில் அதிக தாக்கம் ஏற்படுவது இளைஞர்களிலும், சிறுவர்களிலுமாகும். மேலும், வன்முறைகள் உலகில் ஏற்படும் இறப்புக்களில் ஐந்தாவது இடத்தில் உள்ளது.

2000 ஆம் ஆண்டு 15 மில்லியன் பேர் வன்முறைகளால் இறந்துள்ளனர். இதனால், உலக சுகாதார ஸ்தாபனம் - வன்முறைக ளைப் பாரிய சுகாதாரப் பிரச்சினையாக வெளிககாட்டியுள்ளது. வன்முறையால் சாதா ரண மக்கள் மனநோயாளியாக மாறும் தன்மைகூட, மேலும் ஆளுமை விருத்தி பாதிக் கப்படுகிறது.

வன்முறைகள் - மனதில் ஏற்படுத்தும் சுவடுகளே மனவடுக்களாகும். மனவடுக்கள் என்பது, மனித நடத்தையில் தாக்கத்தைச் செலுத்தும் தன்மையடையது. மனித நடத் தையினைத் தீர்மானிக்கும் காரணிகளான கற்றல், வாழ்க்கைச் சக்கரம், மனித ஆளுமை, தனித்தன்மை, செல்வாக்குகளைச் சமாளித் தல், உடைந்துபோதல், பாசப்பிணைப்புக்கள், அனுபவ விருத்தி என்பவற்றில் மனவடுக்கள் பாதிப்பை ஏற்படுத்தும்.

மனவடுக்கள் - சாதாரண நிர்ப்பந்தங்க ளில் ஏற்படுவனவாகவோ, எதிரான நிர்ப் பந்தங்களில் ஏற்படுவனவாகவோ, மாதிரி உருவாக்கலாகவோ, அறிவுசார் பகுத்தறிவு முறையாகவோ அமையும். மனவடுக்களில் உணர்ச்சிவசப்படல் பற்றுச்சார்ந்த பரிமா ணமாகவும், அறிவுசார்ந்த பரிமாணமாகவும், உடற்தொழிலியல் சார்ந்த பரிமாணமாகவும், நடத்தை சார்ந்த பரிமாணமாகவும் அமையும். மேலும் மனவடுக்கள் சுயநினைவிலுள்ள தேவைகளாலும், நனவிலி நிலையிலுள்ள உந்தல்களாலும் ஒருவரின் ஆளுமையினைப் பாதிக்கும்.

மனவடுக்கள் - இலட்சியநிலையிலுள்ள தேவைகளால் ஒருவரை சமூகசேவகரா கவோ, தியாகியாகவோ, போராளியாகவோ மாற்றக்கூடியது. எனவே, மனவடுக்கள் தனியே பாதகவிளைவை மட்டும் ஏற்படுத்து வதில்லை. இவை சமூகத்தெறிவினையாக தன்னைச் சார்ந்தோரைப் பாதுகாக்கும் தன் மையை, இலட்சியநிலையிலுள்ள ஆளு மையில் காணப்படும்.

வன்முறைகளால் ஒருவரில் ஏற்படும் நெருக்கீடுகள் - உணர்ச்சி வெளிப்பாடான பயம், சோர்வாகக் காணப்படலாம். உடற் தொழிலியல் மாற்றங்களாகக் காணப்படலாம். அனுகூலமானமுறையில் நெருக்கீட்டினை எதிர்கொள்ள, நெருக்கீட்டிலிருந்து விலகிச் செல்லலாம் அல்லது பிரச்சினைகளுக்கு ஊடாகச்செல்லலாம்.

பாதகமானமுறையில் நெருக்கீட்டினை எதிர்கொள்ள மதுபானம், போதைப்பொருட்க ளின் பாவனை, கோப நடத்தைகள், தங்க ளுக்குத் தாங்களே தங்கு நெருக்கீட்டு உணாவுகளிலிருந்து விடுபடல், தமது உணர் வுகளை மற்றவர்களில் வெளிப்படுத்தல் என்பன காணப்படும். சில நெருக்கீடுகளில் தங்களின் எண்ணங்கள், உணர்வுகள் - மற்ற வர்களின் எண்ணங்கள், உணர்வுகளாக அமையும் என நினைப்பர்.

தமது விருப்பத்துக்கு எதிரான செயல்க ளைச் செய்தல், நெருக்கீட்டுக்குக் காரணம் கற்பித்தல், நெருக்கீட்டின் ஏற்றுக்கொள்ள முடியாத உறுத்தல்களை ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையில் அமைத்தல், நெருக்கீட்டின் தன்மையை, இழப்பை அடையாளம் காணல் என்பன ஏற்படுகின்றன.

நெருக்கீட்டின் விளைவுகள் - உடனடியா னதாகவும், நெருக்கீட்டின் பின்னான மனவடு நோயாகவோ அல்லது அனுசரித்து நடக்கும் செயற்பாடுகளாகவோ இருக்கும். தீவிர நெருக்கீட்டின் விளைவுகளாகப் பதகளிப்பு, உணர்வற்ற அல்லது மரத்துப்போனநிலை, நெருக்கீட்டினை மீள நினைவுபடுத்தலைத் தவித்தல், நெருக்கீட்டுச் சம்பவங்கள் - மீள மீள மனதில் வரல் என்பன காணப்படலாம்.

குழந்தைகளில் ஏற்படும் நெருக்கீடுகள் நரம்புக்கல இணைப்பில் பாதிப்பை ஏற் படுத்தி - சிந்திக்கும் ஆற்றல், மொழி ஆற்றல், உணர்வுகளை வெளிப்படுத்தும் தன்மை, கணிதநுட்பம் என்பவற்றைப் பாதிக்கிறது.

குழந்தைகளின் உளத்தாக்கத்தை - அவர்கள் வரையும் ஓவியங்களிலிருந்து உய்த்தறியலாம்.

வன்முறைகளினாலும், மனவடுக்களாலும் பாதிக்கப்படும் சிறுவர்களுக்கு, விசேட கவனம் செலுத்தல் அவசியம். அவர்களுக் குக் கல்வி, தொழில்நுட்ப அறிவு என்பன மட்டுமல்ல - ஒழுக்கம், கலாசாரம், ஆன்மீக நெறி என்பவற்றையும் புகட்டவேண்டும். இதற்குச் சமூகத்தில் முதியோரின் அறிவு, அனுபவம், செயல்கள் முன்மாதிரியாகவும் உதவுவதாகவும் அமைதல் வேண்டும். பெற்றோரும், ஆசிரியர்கள் கல்வி புகட்டுவ தில் மட்டுமன்றி, நற்பண்பு புகட்டு வதிலும் முன்னிற்கவேண்டும். ◆

செய்திக் கட்டுரை

ஜெராட்

# அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்கள் குடாநாட்டு மக்கள் அச்சத்தில்...!

தமிழ் மக்கள் அச்சத்துடன் நடமாடும் சூழ்நிலையே தற்போது நிலவுகின்றது. இந்த அச்சத்துக்கு திருட்டுச் சம்பவங்களும் காரணமாக அமைந்துள்ளன. திருடர்களின் நடவடிக்கைகள் - சிலவேளைகளில் கொலைச் சம்பவங்களையும் நிகழ்த்தி விடுகின்றன.

திருட்டுச் சம்பவங்கள் - சாதாரணவீடு கள், வீதிகள், தொழிற்சாலைகள் மாத் திரமல்லாது ஆலயங்களிலும் நடைபெறு கின்றன. தெய்வம் என்று மதிக்கப்படுகின்ற சிலைகளைக்கூட திருட முற்படுகின்றனர். பயணிகள் வழிமறித்து, வழிப்பறிகள் இடம்பெறுகின்றன. இரவுவேளைகளில் குறிப்பிட்ட பாதைகளை மக்கள் பயன் படுத்த அச்சப்படும் அளவிற்குத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

தொலைபேசி இணைப்புக்கள், கைய டக்கத் தொலைபேசிகளின் வருகைகள் அதிகரித்து வருகின்ற இந்தக் காலகட்டத் தில், தொலைபேசிகள்மூலம் மிரட்டல்கள் செய்யப்படுகின்றன.

இந்த இலகுவான மிரட்டல் வழிமுறை கள்மூலம் பணங்களையும், பொருட்களையும் மிக இலகுவாகத் திருடுகின்றார்கள். சிலர் தமது உயிருக்கும் பயந்து இவ்வாறான மிரட்டல்களுக்கு உடன்பட்டு இருக்கின் றார்கள். எமது பிரதேசத்தில் நிலவுகின்ற திருட்டுச் சம்பவங்களுக்கு மக்களும் ஒருவிதத்தில் காரணமாக அமைகின்றனர். தம்மிடமுள்ள பலவீனங்களை மற்றவர்க ளுக்குக் காட்டிக்கொள்வதனால், திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

திருடர்கள் மக்களுடன் மக்களாகச் சேர்ந்து வாழ்பவர்களாக உள்ளனர். இன்று மக்கள் மத்தியில் காணப்படுகின்ற பலவீனம் என்பது, தம்மை மறந்து ஆடம்பரத்தில் மூழ்குவதாகவுள்ளது.

இந்தப் பலவீனத்தை வறுமையிலுள்ள வர்கள் காண்கின்றார்கள். அவர்களிடம் திருடினால் என்ன என்ற சிந்தனை உரு வாகின்றது. இதிலிருந்து ஆரம்பித்தவர்கள் - தொழில் எதுவுமற்ற நிலையில், திருட்டைத் தொழிலாகக் கொள்கிறார்கள்.

திருட்டுச் சம்பவங்கள் நடைபெறுவதற்கு, இலங்கை ஒருவகையில் காரணமாக அமை கின்றது எனலாம். இலங்கையில் பொலிஸார்- தமது சேவைகளைத் தேவையான இடங்க ளில் ஆற்றுவதில்லை. மக்கள் அதிகமாகக் கூடும் இடங்கள், தனிமையான வீதிகள், நெடுந்தூரப் பயணம் செய்யும போக்கு வரத்துப் பஸ்கள் என்பவற்றில் - பொலி ஸாரின் பாதுகாப்பு இடம்பெறுவதில்லை, உரிய இடங்களில் தமது கடமையைச் செய்வதில்லை.

ஒருபுறம் திருட்டுச் சம்பவங்கள் தொடர்ச் சியாக இடம்பெற்றுக்கொண்டிருக்கும் சூழ் நிலையில், இது தொடர்பான முறைப்பாடுகள் பொலிஸாருக்குக் கிடைத்தும், உரிய நப ரைத் தேடிக் கண்டுபிடிப்பதில் அவர்களின் முயற்சி ஒப்பீட்டிளவில் குறைவாகவுள்ளது, அவ்வாறு பிடிக்கப்படுகின்ற திருடனுக்கு வழங்கப்படுகின்ற தண்டனைகளும் குறை வானதாகவே உள்ளது.

சம்பவத்துக்கு ஏற்ப உடனடியாகத் தண் டிக்கப்படவேண்டிய திருடர்கள் - சட்டத்தின் முன்னே உடன் நிறுத்துவதில் சில நடை முறைப் பிரச்சினைகளை பொலிஸார் சந் திக்கவேண்டியுள்ளது.

ஆரம்பப் பாடசாலைக்குச் செல்லுகின்ற சிறார்களுக்கு, நகைகளை அணிவித்து அனுப்புகின்ற பெற்றோரின் நடவடிக்கைகள் காரணமாகவும் திருட்டுச் சம்பவங்கள் அதிக மாகின்றன.

சிலவேளைகளில் சிறுவர் - பாடசாலைக் குச் சென்றுவிட்டு வீடு திரும்புவதில்லை. திருடர்கள் - சிறுவர்களைக் கடத்திச் சென்று, அவர்களிடமுள்ள நகைகளை அப கரித்துவிட்டு, தப்பி விடுகின்றார்கள். இப்படி யான திருட்டுச் சம்பவங்கள் சிறுவர்களின் உயிர்களுக்குக்கூட ஆபத்து ஏற்படுவதாக அமையலாம்.

இரவுவேளையில், வீதியோரங்களில் மின்சார விளக்குகள் போடப்படுகின்றன. மின்சார விளக்குகள் இல்லாத பகுதிகளி லும், மின்சாரம் தடைப்பட்டுப்போகின்ற சந் தர்ப்பங்களிலும் திருடர்கள் தமது கைவரி சைகளைக் காட்டுகின்றார்கள். இங்கு அவர் கள் தமது வேலைகளை முடித்துவிட்டு, இல குவாகத் தப்பித்துச் செல்வதற்கு - இருட்டுத் துணை புரிகின்றது.

திருட்டுச் சம்பவங்களுக்கு, வறுமை நிலையினை ஒரு காரணமாகக் குறிப்பிட முடிகின்றது. இந்த நிலைக்குக் முக்கிய காரணமான தொழிலற்ற நிலை முக்கிய பிரச்சினையாகவுள்ளது.

வேலை செய்வதற்குப் போதிய கல்வித் தகைமை, உடற்தகுதி பெற்றிருப்பவர்க ளுக்கு தகுதியுள்ள வேலை கிடைக்காமை போன்றவற்றால் அவர்கள் திருட்டுத் தொழி லில் ஈடுபடுகின்ற சூழ்நிலை உருவாகின்றன.

திருட்டுத்தனங்களில் ஈடுபடுகின்றவர்கள் பெரும்பாலும் இளம் வயதுடையவர்களாகவே காணப்படுகின்றார்கள். இவர்கள் சிறுவயதில் பாடசாலையினை இடைநிறுத்திவிட்டு, வீட் டிலே இருக்கின்றார்கள்.

சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவ தில்லை. வாழ்க்கையினை ஓட்டுவதற்காக இவர்கள் திருட முற்படுகின்றார்கள். இளம் வயதில் இவ்வாறான தொழில்களில் ஈடுபடுபவர்களைத் தட்டிக்கேட்பதற்கு எவரு மில்லாதிருக்கின்றனர்.

திருட்டு முயற்சிகளில் ஈடுபட்டு, அவர்கள் பிடிபடுகின்ற சந்தர்ப்பங்களில் - தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு, தமது திருட்டுச் செயலுக்குரிய காரணங்களையும், குற்றம் செய்தமையையும் கூறிவிடுவார்கள்.

இத்தகைய நிலைமை ஒருகாலத்தில் நிலவியிருந்தது. திருடர்களில்கூட உண்மை கூறுபவர்கள் - தமது தொழிலில் நியாய பூர்வமாக நடந்துகொண்டார்கள்.

தற்போதைய நிலையில், நாகரிக உடையணிந்து, பண்பாடுள்ள, படித்தவர்கள் போலச் செயற்படுபவர்கள் - இத்தகையை திருட்டுச் சம்பவங்களில் தொடர்புபடுகின்றார் கள். இவர்கள் திருட்டு முயற்சிகளில் தொடர்புடையவர்கள் என்று இனங்காணப் பட்டால், தனிப்பட்டரீதியில் மிரட்டல்களுக்கு ஆளாகவேண்டியேற்படுகின்றது.

இந்தநிலையில், திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றபோது, அயலிலுள்ள நண்பர் கள் தெரிந்தும் தெரியாதவர்களாய் இருக் கின்றார்கள். தாம் தலையிடுவதால், தமக் குப் பிரச்சினையை ஏற்படுத்தும் என்ற சுய நலத்துடன் வாழ்கின்றார்கள். திருட்டுச் சம் பவங்களில் பாதிக்கப்பட்டவர்களால், மட்டுமே எவ்வாறு திருட்டைத் தடைசெய்யமுடியும்.

எமது பிரதேசங்களில், பொலிஸாரின் சேவைகள், இராணுவத்தின் முகாம்கள் இருக் கின்றபோதிலும் - ஒப்பீட்டளவில் இவர்களால் திருடர்கள் பிடிபடும் செயலைக்காட்டிலும், கலாசாரம் பேணும் குழுவினர்களாலேயே திருடர்கள் கைதுசெய்யப்படுகின்றனர்.

அவ்வாறு கைதுசெய்யப்படுபவர்கள் சிலர்- அரசியற் சூழ்நிலைகளால் தப்பித்து விடுகின்ற வாய்ப்புக்களே அதிகமாக வுள்ளது. முழுமையான தண்டனை கொடுக்க முடியாதுள்ளது.

மக்களிடையே விழிப்புணர்வு தோன்ற வேண்டிய தேவை இந்நிலையில் அத்தியா வசியமாகின்றது. திருட்டுச் சம்பவம் பற்றி அறிந்தவுடன், சம்பந்தப்பட்டவர்களுக்கு முதலில் தெரியப்படுத்துதல் வேண்டும்.

திருட்டினைத் தூண்டும் சம்பவங்களைத் தவிர்த்து நடத்தல் வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளால் திருட்டுச் சம்பவங்களை முற்றாக ஒழித்துவிடமுடியாது. எனினும், 'திரு டனாய்ப் பார்த்துத் திருந்துகின்ற சூழ் நிலைகளை' ஏற்படுத்துவதே அனைவரதும் முக்கிய கடமையாகவுள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்த
ஒன்றும் கள்ளாமை காக்கதன் நெஞ்சு. திருக்குறள்

## நமது நோக்கு

# ஐம்பெரும் கொள்கைகள் சாதிக்கப்போவது என்ன ?

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பியினருக்கும் இடையிலான அரசியல் கூட்டு புரிந்துணர்வு உடன் படிக்கை நேற்றுமுன்தினம் வைபவரீதியாக வெகு ஆடம்பரமான விளம்பரங்களுடன் கைச்சாத்தானதைத் தொடர்ந்து, அவர்கள் வெளியிட்ட ஐம்பெரும் கொள்கைத்திட்டம் பெரும் விம்ர்சனத்திற்கும், வியப்பிற்கும்... ஏன் கிண்டலுக்கும் உள்ளாகியது.

ஒரு காலத்தில் இடதுசாரிப் பொதுவுடமை மற்றும் சோஷலிச கொள்கைகளைக்கொண்ட கட்சிகளின் தோழமைக்கு நெருக்கமான கட்சியாகத் தன்னை இனங காட்டிக்கொண்டு அரசியலில் பிரவேசித்த பண்டார நாயக்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, அப்போதைய பொதுவுடமைவாதிகளுள் கடும் போக்காளராகக் கருதப்பட்ட பிலிப் குணவர்த்தனவின் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி (எம்.ஈ.பி) உடன் இணைந்து கூட்டணி அமைத்த முதலாளித்துவக் கட்சியென அவர்களால் வர்ணிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டு, 1956 இல் ஆட்சியைக் கைப்பற்றியது.

இந்தத் தேர்தல் - அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றப் பாவித்த இனவாத கோஷம் - 24 மணிநேரத்தில் தனி சிங்களச் சட்டத்தைப் பிரகடனம் செய்வோம் என்பதாகும். இது இட துசாரிகளின் - இனவாத சித் தாந்தப் பிடிப்பினை பகிரங்க மாக்கியது.

இதனைத் தொடர்ந்து 1958 இல் ஏற்பட்ட இனக்கலவரம் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் தமிழின அழிப்பு இலக்கினை துலாம்பரமாக்கியதுடன், சிங்கள இடதுசாரிகளின் இனவாத இதயத்தையும் வெளிப்படுத்தியது. பின்னர் 1960 களில் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் ஆட்சிபீடம் ஏறிய சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அரசில் அங்கம் வகித்த கூட்டணிக் கட்சிகளில் கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் முக்கியமானவைகளாகும்.

அந்தக் காலத்தில் தமிழ்மக்கள் தமது அரசியல் உரிமைகளுக்காக நடத்திய அமைதிவழி சத்தியாக்கிரகப் போராட்டங்களை - இராணுவ பலத்தைப் பிரயோகித்து ஆயுதமுனையில் அடக்கிய இந்த அரசே, பின்னர் குடியரசு அரசியல் யாப்பொன்றினைப் புதிதாக உருவாக்கும் வாய்ப்பு கிடைத்தபோது, அதில் தமிழ்மக்களின் உரிமைகளை மேலும் பறிக்கும் சட்டங்களை சேர்த்ததுடன், அவர்களை சகல வகையிலும் மூன்றாம்தரப்புப் பிரஜைகளாக ஒதுக்கி ஓரங்கட்டிய துரோகத்தைச் செய்தனர்.

இந்தத் துரோகத்தனமான செயலுக்குப் பக்கபலமாக இருந்தவர்கள் இடதுசாரிகளேயாவர்.

தரப்படுத்தல் என்ற கல்விச்சட்டமூலம் ஒன்றை வகுத்து, தமிழ்மக்களின் அறிவு வளர்ச்சிக்குத் தடைபோடும் நடவடிக்கைகளிலும் இந்த இடதுசாரி இனவெறியர் பங்கேற்கத் தவறியதில்லை.

பின்னர், ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் பதினேழு ஆண்டு கால இரத்தவாடை வீசும் ஆட்சியின்போது நடந்த இனக்கலவரங்கள், போர் நடவடிக்கைகள் அனைத்தையும் இந்த இடதுசாரிக் கூட்டணியினர் எந்தவகையிலும் எதிர்த்ததே கிடையாது.

1994 இல் சந்திரிகா ஆட்சிக்கு வந்தபோது, இதே இடதுசாரகள் அவருடன் இணைந்து செயற்பட்டவேளையில்தான் 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற சந்திரிகாவின் இனவெறிக்கூத்து அரங்கேறியது.

அப்போதும் இந்த இடதுசாரிகள் மௌனம்காத்து, இனவாதத்திற்கான அங்கீகாரத்தை வழங்கவே செய்தனர்.

எனவே, இந்த நாட்டின் சிங்கள இடதுசாரிகளில் பெரும்பாலானோர் ஒருபோதுமே உண்மையான சமதர்ம வாதிகளாக இருந்ததே கிடையாது. அவர்கள் இனவாதம் கக்கும் சந்தர்ப்ப வாதிகளாகவே இருந்து வருகின்றனர்.

இப்போது ஏற்பட்டுள்ள புதிய கூட்டணியில் - சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் ஒருகாலத்தில் அதாவது 'காலஞ் சென்ற' இடதுசாரிக் கொள்கைவாதிகளான ஜே.வி.பியினரே இணைந்துள்ளனர்.

ஆனால், அவர்கள் தற்போது தம்மை புரட்சிவாதிகள் என்றோ, மார்க்ஸியவாதிகள் என்றோ, மாவோஜிஸத்தைக் கடைப்பிடிப்பவர்கள் என்றோ இனங்காட்டாது, தூய முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் என்றே பிரகடனம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் சிவப்புச் சட்டையும், சிவப்பு தொப்பியும் அணிந்து - பாட்டாளி மக்களினதும், விவசாயிகள், தொழிலாளர்களினதும் தோழர்களாகப் போட்ட போலிவேஷம் கலைந்துள்ளது.


தாம் முதலாளித்துவவாதிகள் என்று மக்களிடம் கூறுவதன் மூலம், தம்மை ஏகாதிபத்தியவாதிகளின் முகாமுக்குள் இணைத்துக்கொள்ளும் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இனி அவர்களின் அமெரிக்க எதிர்ப்புக் கோஷமோ, மேற்குலக எதிர்ப்புக்குரலோ எடுபடப்போவதில்லை.

அவர்களின் தலைமறைவுத் தலைவர் சோமவன்ச அமரசிங்க - லண்டனில் தனது மூளையை நன்றாகவே சலவை செய்து கொண்டுள்ளார் என்பது தெளிவாகியுள்ளநிலையில், அவர்கள் முன்வைத்துள்ள ஐம்பெரும் கொள்கை வெறுமனே ஒரு முதலாளித்துவ ஜனநாயகவாதியின் பரபரப்பு அறிக்கையாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே, இந்தக் கூட்டணியும் தமிழர் பிரச்சினையில் ஒரு நியாயமான தீர்வுக்கு வரப்போவது கிடையாது என்பதை - நிபந்தனைகளுடன், விடுதலைப் புலிகளுடன் பேசுவோம் என்ற அவர்களின் வார்த்தைகளே நிரூபிப்பதாகவுள்ளது.

## நாடும் நடப்பும்




# ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டணியை ஈ.பி.டி.பி - தினேஷ் - ஹிஸ்புல்லா வரவேற்பு

தேசப்பற்றுள்ள மக்கள் அனைவரும் ஜே.வி.பிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் கூட்டணியை வரவேற்பார்கள் என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும், பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

மேலும், மக்கள் ஐக்கிய முன்னணி - அரசியல் கூட்டமைப்பு ஒன்று உருவாவதற்கான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தக் கூட்டணி அமைக்கப்பட்டது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் நெல்சன் எதிரிசிங்க - இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவி வழங்கக்கூடிய எந்தவொரு கூட்டமைப்பையும் தமது கட்சி வரவேற்கும் என்றும், அனைத்துக் கட்சிகளும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே, தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா இந்தக் கூட்டணி அமைக்கப்பட்டது தொடர்பாக கருத்து வெளியிடுகையில் - தமது கட்சி இதனை வரவேற்பதாகவும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் அங்கத்துவம் பெற கால அவகாசம்

## யாழ்.கமநல சேவைத் திணைக்களம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தின்கீழான அங்கத்துவத்தினை மீளவும் புதுப்பிக்க விரும்புவோர், எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது அங்கத்துவத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு யாழ். மாவட்ட கமநலசேவைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்.மாவட்ட விவசாயிகள் கமநலசேவைத் திணைக்களத்தில், விவசாயிகள் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்வதோடு, உறுப்பினர்களுக்கான கட்டணத்தை உரிய முறையில் செலுத்திவந்தால் அவர்களுக்கு அறுபது வயதின் பின் ஓய்வூதியத் தொகை வழங்கப்படுவது வழக்கம்.

இந்தத் திட்டத்தின்கீழ் இணைந்துகொண்ட பல நூற்றுக் கணக்கானோர் கடந்தகால யுத்த அனர்த்தத்தால் - தமது உறுப்பினர் கட்டுப்பணத்தைச் செலுத்தாததோடு, உறுபபுரிமையில் இருந்தும் நீக்கப்பட்டிருந்தனர்.

எனினும், அவர்களுக்குச் சலுகை வழங்கும் பொருட்டு, மீண்டும் இத்திட்டத்தில் சேரவிரும்புவோர் எதிர்வரும் மார்ச் 29 ஆம் திகதிக்கு முன்னர் தமது உறுப்பினர் அட்டையைப் பெற்று, தமது அங்கத்துவத்தினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

இவ்வாறு மீண்டும் தமது உறுப்பினர் உரிமையைப் பெற விரும்புபவர்கள், தமது காலதாமதத்திற்கான தண்டப்பணமாக ஒரு சிறுதொகைப பணம் செலுத்த நேரிடலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புதிய விவசாய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், கமநல சேவைத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (ப)

# போக்குவரத்து விதிகளை மீறிய பதின்நான்கு பேருக்கு தண்டம் !

போக்குவரத்து விதிமுறைகளை மீறும் விதத்தில் வாகனம் செலுத்திய பதினான்கு பேருக்கு தண்டப்பணம் அபராதமாக விதித்து, யாழ். நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப் பளித்தது.

துவிச்சக்கர வண்டிகளில் சமாந்தரமாகச் சென்ற ஒன்பது பேருக்கு முந்நூற்று ஐம்பது ரூபா தண்டப்பணமாகவும், கவனயீனமாக வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய ஒருவருக்கும், ஒருவழிப்பாதையினூடாகத் தடைசெய்யப்பட்ட திசையில் வாகனத்தை செலுத்தியமைக்காக ஒருவருக்கும் ஐந்நூறு ரூபா தண்டப்பணம் அபராதமாக விதிக்கப்பட்டதோடு, ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்தும்படி உத்தரவிடப்பட்டது.

மேலும் - வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதி அனுமதிப் பத்திரம் போன்ற ஆவணங்கள் இல்லாதும், தலைக்கவசம் இல்லாதும் வாகனம் செலுத்தியமைக்காக மூன்று பேருக்கு ஐந்நூறு ரூபா தண்டப்பணமும், ஆயிரம் ரூபா தர்மப்பணமும் அபராதமாக விதிக்கப்பட்டது. (ச)

# வாகனத் தரிப்பிட வசதிகளின்றி வைத்தியசாலைக்கு வருவோர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வாகனத் தரிப்பிட வசதியின்றி, வைத்தியசாலைக்கு வரும் பொதுமக்கள் அவதிப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலைய காணிப்பகுதியினுள் தேசிய சேமிப்பு வங்கி தற்பொழுது புதிதாக ஒரு மாடிக் கட்டடத்தை அமைத்துவருகிறது.

இதனால், சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திற்கான இட ஒதுக்கீடு குறைவாகவுள்ளதாகவும், அதனால் கூடுதலான சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களை நிறுத்தமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு நிலையத்தில் நிலவும் இடநெருக்கடி காரணமாக, வைத்தியசாலைக்கு வரும் பொதுமக்கள், தமது சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை வாகனம் நிறுத்துவதற்கு தடைசெய்யப்பட்ட இடத்தில் நிறுத்துகின்றனர். இதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுவதாகவும், சைக்கிள்கள் திருட்டுப்போகும் அபாயமுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிலவேளைகளில் வீதியோரங்களில் நிறுத்தப்படும் வாகனங்களை போக்குவரத்துப் பிரிவு பொலிஸாரும் எடுத்துச்செல்கின்றனர். பின் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றே வாகனங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளது.

வெளிநோயாளர் பிரிவுக்கு வருபவர்கள், நோயாளிகளைப் பார்வையிட வருபவர்கள் நன்மைகருதி - புதிய துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்தை அமைக்கவேண்டியது அவசியமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, மக்கள் நலன்புரிச் சங்கத்தினரால் வைத்தியசாலை வளாகத்தினுள் ஒரு பாதுகாப்பு நிலையம் நடத்தப்பட்டு வந்தாலும், முந்நூறுக்கு மேற்பட்ட சைக்கிள்களை இந்தத் தரிப்பிடத்தில் நிறுத்துவது கடினமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# உங்களின் புத்தாண்டு யோகம் எப்படி?



## கும்பம்

*(சித்திரை 3 ஆம், 4 ஆம் கால்கள், சுவாதி, விசாகம் 1ஆம், 2 ஆம், 3 ஆம் கால்கள்)*

*குணத்தால் உயர்ந்து பிரகாசிக்கும் கும்பராசி நேயர்களே!*

நீங்கள் பழமையில் ஈடுபாடும் புதுமையில் பற்றும் உடையவராக இருப்பீர்கள். தன்னம்பிக்கையும் உயர்ந்த இலட்சியமும் உங்களை முன்னெடுத்துச் செல்லும். வருடத் தொடக்கத்தில் குருபகவான் ஏழாம் வீட்டில் சஞ்சரிப்பார்.

கணவன் மனைவியிடையே நல்லுறவும், உறவினரிடையே நல்ல ஈடுபாடும். ஆடை ஆபரணங்கள் சேர்க்கை உண்டாகும். உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். குரு பார்வையால் ஆன்மபலம் பெற்று எல்லாக் கருமங்களையும் சிறப்பாகச் செய்வீர்கள். செய்தொழில்கள் விரிவடையும். பணம் எந்நேரமும் கையில் புழங்கிக்கொண்டே இருக்கும்.

குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் இருக்காது. திருமணம், வீடுகட்டுதல், புத்திரப்பேறு போன்ற நற்கருமங்கள் நடக்கும். முன்பு விரோதம் பாராட்டக்கூடியவர்கள் சமரசத்துக்கு வருவார்கள். கோவில் யாத்திரைகள் தான தருமங்கள் என்பவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். புதிய மதிப்பு வந்துசேர இடமுண்டு. உழைப்புக்கு மதிப்பு வைத்து முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள். வீட்டில் குதூகலம் நிறைந்திருக்கும். பொதுமக்கள் பலவித நன்மையைச் செய்வார்கள். ஆவணி மாதம் குரு பகவான் அட்டம ராசிக்கு வருகிறார். அதன் மேல் வாழ்க்கையில் பல திருப்பங்கள் ஏற்படும். கஷ்டம்வரும்போதும் அதனைச் சகித்துக்கொள்ளவேண்டும். பணத்துக்கு ஆசைப்பட்டு, தவறுகளைச் செய்யக் கூடாது.

நேர்மையாக நடந்தால் கஷ்டங்களையும் சமாளிக்கலாம். பல வழிகளிலும் இது சோதனைக் காலமாக அமையும். நண்பர்களின் உதவிகூடக் கிடையாமல்போகும். தெய்வ வழிபாட்டால் நன்மை அடையலாம்.

### பெண்களுக்கு

வருட முற்பகுதி மிகநன்று. குடும்பத்தில் உங்கள் சொற்படி எல்லோரும் நடப்பார்கள். சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் மதிப்புக் கொடுப்பார்கள். நல்ல நிலையிலிருக்கும் உங்களை உறவினர்கள், நண்பர்கள் நாடி வருவார்கள். பொருளாதார ரீதியாகவும் கஷ்டம் ஏற்படும். குடும்ப கௌரவத்தை பாதுகாக்கவேண்டும்.

### வியாபாரிகள் - தொழில் துறையினருக்கு

உங்கள் திட்டங்கள் யாவும் மிக விரைவில் செயற்படும். தொழில்துறையில் அபிவிருத்தியும், தொழில் ஏற்படும் வாய்ப்பும் உண்டு. ஆவணியின்மேல் தொழிலில் தொய்வு ஏற்படும். முயற்சியைக் கைவிடாமல் சீராகச் செயற்படவும், அளவுக்குமிஞ்சி கடன் வாங்குவதால் வட்டிவரைவும் கூடும்.

### உத்தியோகத்தர்களுக்கு

உங்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு, பொருளாதார உதவிகள் எல்லாம் கிடைக்கும். உயரதிகாரிகளின் ஆதரவும் உண்டு. உற்சாகமாகப் பணியாற்றுவீர்கள். பிற்பகுதியில் சீராகப் பணியாற்றி வரும் நீங்கள் லஞ்சம்போன்ற விஷயங்களில் சிக்கக்கூடும். அவதானமாகச் செயற்படவும்.

### அரசியல்வாதிகளுக்கு

உங்கள் நெடுநாளைய ஆசை நிறைவேறும் பல பதவிகளும் தேடிவரும். பலருக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பங்களும், திருமணம் போன்ற மகிழ்ச்சியான விடயங்களும் நடக்கும். வருட இறுதியில் சூழ்நிலைகளுக்கேற்ப செயற்படவேண்டி வரும்.

### மாணவர்களுக்கு

பல வழிகளிலும் உங்களுக்கு நல்ல காலமாக அமையும். பெற்றோர்கள், ஆசிரியர்கள், குடும்பத்தவர்கள் எல்லோரும் உங்கள் முன்னேற்றத்துக்காக உழைப்பார்கள், குருமாற்றத்தின் மேல் தீய சக்திகளின் தூண்டுதலால் படிக்கும் திறமை எல்லாம் சோதனைக்குள்ளாகும். நிலைமையை அறிந்து செயற்படுங்கள்.



## மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி)*

*அன்புக்குக் கட்டுப்பட்டு அனைவரையும் தம்பால் ஈர்த்துக்கொள்ளும் திறமையுடைய மீனராசி நேயர்களே!*

உடலும், உள்ளமும் தூய்மையாக இருக்கவேண்டும். சுற்றுப்புறச் சூழலும் தூய்மையானதாக ஆக்கவேண்டுமென்ற எண்ணமுடையவர்கள் நீங்கள். வருடாரம்பத்தில் குருபகவான் ஆளும் இடத்தில் சஞ்சரிப்பதால் உடல்நலம் பாதிப்படைய இடமுண்டு. இருந்தாலும் உங்கள் கடமைகளில் செயற்பாடுகளில் முன்னேற்றமுடையவர்களாகவே இருப்பீர்கள்.

இந்தச் சூழ்நிலையில் நல்ல பலன்களையோ பெரிய தனலாபங்களையோ நீங்கள் எதிர்பார்க்க முடியாது. அரசாங்கம், நீதிமன்றம் போன்றவை உங்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். சொத்துத் தகராறுகள், குடும்பப் பிரச்சினைகள் எழக்கூடும். வாழ்விடப் பிரச்சினைகளும் தலைதூக்கும்.

உங்கள் சேமிப்பின் பெரும்பகுதி வீணாக விரையமாகும். உங்களுக்குச் சாதகமான பதிவேடுகள், கோப்புக்கள் இவைகளைப் பத்திரப்படுத்தி வைப்பது நன்று. உறவினருக்குள் தப்பபிப்பிராயங்கள் தோன்றும். எதையுமே நீங்கள் நல்லமுறையில் சாதித்துக்கொள்ள முடியாமலிருக்கும்.

28.08. 2004 மேல் குருபகவான் உங்கள் ராசியை நோக்குவதால் பல அவதிகள் தீரும். தொழில்களில் இருந்த தேக்க நிலை நன்மைக்குவரும். தடைப்பட்டிருந்த திருமணம் உத்தியோகம், கல்வி என்பன மீண்டும் கிட்டும். பலவகையாலும் நன்மையான பலன்கள் ஏற்படும். பகைவர்கள்கூட மனம்மாறி நண்பர்களாக உதவி செய்வார்கள். புத்திரபாக்கியம் உண்டாகும். சொந்த வீடு, நிலம் மீட்கப்பெறும். இந்த ஆண்டின் கடைசிப்பகுதி அடுத்த ஆண்டில் சிறப்பான பலன்களையடைய முன்னோடியாக அமையும்.

### பெண்களுக்கு

யாரிடமும் எந்தப் பேச்சுவார்த்தையும் வைத்துக்கொள்ளாதீர்கள். எதைச் சொன்னாலும் அது உங்களுக்குக் கஷ்டமாகவே அமையும். மாமனார், மாமியார் போன்றவர்கள் எதிர்ப்பாகவே இருப்பார்கள். வருடப் பிற்பகுதி பிரச்சினைகள் தீரும். மக்கள் முன்னேற்றத்தால் மகிழ்ச்சியடைவீர்கள்.

### வியாபாரிகள், தொழில்துறையினருக்கு

தொழிலில் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். அரசாங்க கெடுபிடிகளும் பாதிக்கும். ஆவணிக்கும் முன் புதிய முதலீடுகளைச் செய்யாதீர்கள். பின்பு சூழ்நிலை திருந்தி சிறப்பான எதிர்காலத்தைக் காணலாம். செய்தொழில் சிறப்பினால் ஆதாயம் ஏற்பட்டுக் கையிருப்பு அதிகமாகும்.

### உத்தியோகத்தர்களுக்கு

நீங்கள் எப்படிப் பணிவாக சிறப்பாகச் செயலாற்றினாலும் அதிகாரிக்கு திருப்தியேற்படாது. அவர்களுக்குப் பழிவாங்கும் நோக்கமே இருக்கும். எதிர்நீச்சல் போட்டுக் கருமங்களைச் சாதிக்கவேண்டும். பிற்பகுதியில் உயர்ந்த நன்மையை அடைவீர்கள். விரும்பிய இடமாற்றங்களும், உயர்ச்சியும் கிடைக்கும்.

### அரசியல்வாதிகளுக்கு

உங்களைச் சுற்றியுள்ள குதர்க்கவாதிகள் உங்களை வீழ்த்த முயற்சிப்பார்கள். சில சந்தர்ப்பத்தில் வாய்ப் பேச்சு அடி தடியில் முடியும். அவதானமாகச் செயற்படுங்கள். பிற்பகுதியில் யாவும் திருந்தி நற்பலன் ஆரம்பிக்கும். கௌரவமும், வாழ்க்கையும் படிப்படியாக முன்னேறும்.

### மாணவர்களுக்கு

எப்படி முயன்றாலும் தோல்வியே உங்களுக்கு நேரும். இந்தக் காலத்தில் ஆசிரியர், பெற்றோரின் சொற்படி நடக்கவேண்டியது முக்கியம். ஆவணி மாதத்தின்மேல் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்குவீர்கள். முன்னேற்றப் பாதையில் அடியெடுத்துவைத்து முன்னுக்கு வாருங்கள். திறமையை வெளிப்படுத்தி எல்லோருடைய நெஞ்சத்திலும் நிலையான இடத்தைப் பிடிப்பீர்கள். *(முற்றும்)*

## சமகால அரசியல் பார்வை பகுதி - III - எஸ்.ஜெயா

# இலங்கையின் கட்சி அரசியலில் தலைமைத்துவத்தின் உளத்தாக்கம்

இப்படிப்பட்ட தலைமைத்துவத்தினைக் கொண்டவர்களை 'நிர்வாகத்தின் குழந்தைகள்' என அழைக்கப்படுகின்றது. ஏனென்றால், குழந்தைகளுக்கு நிறைய சக்தி இருந்தும், அதற்கான அதிகாரமின்மையால் சக்தியை நல்ல வெளியீட்டிற்காக பயன்படுத்திக்கொள்ள முடியாது இருக்கின்றனர். அத்தோடு பலம் வாய்ந்தவர்களின் ஆலோசனைக்கு கீழ்ப்படிபவர்களாகவே காணப்படுகின்றனர்.

இவ்வாறு ரணில் விக்கிரமசிங்கவும் சக்தி அதிகமாக இருந்தபோதும் அதிகாரமின்மையால் நல்ல வெளியீட்டிற்கு பயன்படுத்த முடியாது இருப்பதோடு பலம் வாய்ந்த அமெரிக்காவின் ஆலோசனைக்குக் கீழ்ப்படிவதாகவும் அமைகின்றது.

வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தது போன்று சந்திரிகா அம்மையார் புலிகள் முதன்முதலாக தீர்வுத்திட்டம் ஒன்றை சமர்ப்பித்தவேளை மூன்று அமைச்சுக்களையும் (பாதுகாப்பு உட்பட) பிடுங்கி எடுத்தமையானது இந்தியாவின் திரைமறைவு வேலையாகவே கருதப்படுகின்றது.

சுமுகமான முறையில் இடம்பெற்று முன்னேறி வந்த பேச்சுக்களை உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்த இந்தியா, தனது நாட்டு நலனை மேலாதிக்கம் செய்யும் நோக்கோடும், தனக்கும் புலிகளுக்கும் உள்ள உட்பகைமையையும் கருத்தில் கொண்டு பொறுத்த நேரத்தில் இந்தியாவால் இலங்கைக்கு கொடுக்கப்பட்ட ஆலோசனையே சந்திரிகாவின் இத்திடீர் நடவடிக்கையாகும்.

ஏனெனில் அமைச்சுப்பதவி பறிக்கப்பட்ட கையோடு இலங்கை ஜனாதிபதி இந்திய பிரதமரோடு தொலைபேசியில் தொடர்புகொண்டதோடு இந்தியா தனது தூதுவரையும் அனுப்பி இருந்தது மேலும் இத்தோடு இலங்கை இந்தியாவுக்கான பாதுகாப்பு ஒப்பந்த ஏற்பாடுகளும் இதனை நிரூபித்துக்காட்டுகின்றன.

இதனை எடுத்து நோக்குகையில் - இந்தியா தனது நலனைப்பேணும் செயற்பாட்டிற்கு இலங்கை ஜனாதிபதியினை ஒரு கருவியாக பயன்படுத்துகின்றமை புலனாகின்றது.

இந்தியா இத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. புலிகளே ஏகப்பிரதிநிதிகள் எனும் கோசத்தோடு வெற்றிகண்ட தமிழர் கூட்டமைப்பின் தலைமையையும் தனது பலத்தினைக் கொண்டு முரண்படவைத்தது.

இதன் வெளிப்பாடாகவே ஆனந்தசங்கரியின் அண்மைக்கால பேச்சு மற்றும் நடவடிக்கைகள் அமைந்ததைக் காணலாம். இது தமிழரின் ஒருமித்த கூட்டுப்பிரதிநிதித்துவத்தில் ஓர் பிளவை உண்டு பண்ணியது எனலாம்.

இதேபோன்றே முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் காங்கிரஸின் நிலையற்ற கொள்கையையும், கனதி அற்ற தலைமைத்துவத்தினையும் குறிப்பிடலாம்.

இப்படிப்பட்டவர்களின் இத்தகைய சுயநலப்போக்கே, ஏகாதிபத்திய அரசுகளுக்கு மிகவும் சாதகமாக அமைந்து விடுகின்றன. எனவேதான் - தமிழர், முஸ்லிம்கள், மலையகத்தவர்களென எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஓர் கூட்டமைப்பிற்குள் போட்டியிடுமாக இருந்தால் தென்னிலங்கை அரசியல் வரலாற்றினையே ஆட்டங்காணச் செய்யமுடியும். இத்தகைய இன்றைய சூழ்நிலை மிகவும் பொருத்தமான தொன்றாகும்.

'பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு உயிர்போகுது' என்பது போல் தமிழர் பிரச்சினைகளை ஜனாதிபதி, பிரதமர் என்ற கருவிகள் ஊடாக, இந்தியா, அமெரிக்கா என்ற இரு பூனைகள் - தமிழ் மக்களை சுண்டெலிகள் என நினைத்து விளையாட்டுப் பார்க்கின்றன.

ஆனால் இத்தகைய விடயங்கள் அனைத்தையும் சூழந்து அவதானித்துக்கொண்டு புலி இரண்டு ஆண்டுகளாக பட்டினியாக கிடக்கின்றது. 'புலியானது பசித்தாலும் புல்தின்னாது' என்பது பழமொழியாகும்.

எது எவ்வாறு இருப்பினும் இத்தகைய சூழ்நிலையானது புலிகளுக்கு ஓர் வாய்ப்பான கள அமைவினையே ஏற்படுத்திக்கொடுத்தது. அதாவது தமது ஆயுதப்போராட்டத்தினை நியாயப்படுத்தவும், தமது நிர்வாகத்திறன்களை வெளிப்படுத்தவும் இலங்கை அரசால் சர்வதேச அளவில் வழங்கப்பட்ட ஓர் வாய்ப்பாகும்.

இதன்மூலம் தமிழர் பேராட்டம் உலகமயமானதோடு, உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் பெறத்தக்கதான ஓர் உயர்நிலையினையும் அடைந்துள்ளது.

எனவே, இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்குகையில், இன்றைய அரசியல் நிலைப்பாட்டின் இறுதிமுடிவினை தீர்மானிக்கும் ஒரே நபர் தேசிய தலைவர் பிரபாகரன்தான். அதாவது போரா அல்லது சமாதானமா அல்லது தேர்தல் நடந்தால் தென்னிலங்கையினை யார் ஆளவேண்டும் என்பதை இறுதிமுடிவெடுக்கும் அதிகாரம் இன்றைய நிலையில் இவருக்கே உண்டு.

இத்தகைய நிலையில் நாட்டில் தேர்தல் ஒன்று நடக்குமாக இருந்தால், திறைசேரியானது பெரும்நிதியியல் பற்றாக்குறையினை எதிர்நோக்கவேண்டி ஏற்படும். தேர்தலானது ஐந்தாண்டுக்கு ஒரு தடவை இடம்பெறுவதே வழமை. ஆனால், நாட்டிற்குப் பொருத்தமற்ற அரசியல் யாப்பின் விளைவாக அடுத்தடுத்து குறுகிய காலத்துக்குள் தேர்தல்கள் இடம்பெற ஏதுவாகின.

இந்நிலையானது பெரும் நிதியியல் செலவினங்களை அதிகரிப்பதால் அரசானது நாட்டின் நிர்வாக நிலையினை மேம்படுத்த முடியாது போய்விடும். இதன் காரணமாக புதிய வேலை வாய்ப்புக்கள், சம்பள உயர்வுகள் என்பனவற்றினை மேற்கொள்ள முடியாது திண்டாடுவதோடு இதற்கான பாரிய கடன்சுமையை வெளிநாடுகளிலிருந்து பெற வேண்டியேற்படும்.

இது இலங்கையின் நிர்வாக கட்டமைப்பில் சர்வதேச நாணயநிதியம் உலகவங்கி என்பவற்றின் தலையீட்டினை அதிகரித்துவிடும். இதனால் இவர்களின் ஆலோசனையை கைக்கொள்ளவேண்டிய ஒரு கட்டாயநிலை தோன்றிவிடுகின்றது.

இத்தகைய கடன் அமைப்பின் பாரிய நிலையானது உலகநிதி நிறுவனங்களின் ஆலோசனைக்கு அமைய பல அரச நிறுவனங்கள் குத்தகைக்கு அல்லது அறுதியாக விற்பனை செய்யப்படுகின்றன.

இதன் விளைவாகவே சீனன்குடா எண்ணெய்க்குதம், திருகோணமலைத்துறைமுகம் மற்றும் சில அரச வங்கிகள் காப்புறுதி நிறுவனம் மின்சாரசபை என்பனவும் குத்தகைக்கு அல்லது அறுதியாக விற்கப்பட்டன.

அரசானது இத்தோடு நிற்காமல் தனது நிதியியல் பற்றாக்குறையினை ஈடுசெய்ய கல்வி நிறுவனங்களையும் குத்தகைக்கு விட்டது. இதன்பயனாக யாழ். தொழில்நுட்பக்கல்லூரி உட்பட இலங்கையில் 5 தொழில்நுட்பக்கல்லூரி குத்தகைக்கு விடப்பட்டதால் அவை இன்று தொழில்நுட்ப கூட்டுத்தாபனமாக மாறியுள்ளது.

இவ்வாறு மாறிமாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் தமது சுயநலநோக்குடனும், குறுகிய வளங்களையும் விற்பனை செய்வதால் அரசுக்கு குறுகிய காலத்தில் ஏற்படும் நன்மையூடாக நீண்ட காலத்தில் ஏற்படக்கூடிய இழப்பும், இன்றைய சமாதான முடக்கத்தால் சுணங்கிப்போன நிதி வரவும் அரசினை எதிர்காலத்தில் ஒரு கையறு நிலைக்கு உட்படுத்திவிடும்.

இத்தகைய ஒரு காலச் சூழ்நிலையில் தேர்தல் ஒன்று நடக்குமாக இருப்பின், அது அரசினை பாரியதொரு இக்கட்டான நிலைக்கு உட்படுத்துவதோடு எந்தவொரு கட்சியும் நீண்டநாட்கள் ஆட்சிசெய்ய முடியாத தொங்கு நாடாளுமன்ற நிலையையே உருவாக்கும்.

இத்தகைய நிலையினால் புலிகள் உறுதியான ஓர் முடிவினை எடுக்கவேண்டிய நிலைக்குத் தூண்டப்படுவர். இந்நிலையானது தமிழ் மக்கள் தொடர்ந்தும் இலங்கை அரசின்கீழ் இருப்பதா அல்லது தனியாக பிரிந்து செல்வதா என்பதை முடிவு செய்வதாக அமையும்.

இத்தகைய பிரிவு ஒன்றுக்கு தென்னிலங்கையில் ஆட்சிபுரியும் எந்தவொரு கட்சியும் உடன்படப்போவதில்லை. இதனால் யுத்தமா? சமாதானமா என்ற இறுதி முடிவுக்கு தள்ளப்படுவர்.

இத்தகையதொரு நிலையில் யுத்தம் ஒன்று மூளுமாக இருந்தால், புலிகள் பாரிய ஆயுதங்களுடனும், பாரிய படையணியுடனும் பலமான பின்னணியினையும் கொண்டு யுத்தம்புரிவர். அவ்வாறு ஓர் உளநிலைக்கு, புலிகள் தலைமைத்துவம் தூண்டப்படுமாக இருந்தால், எதிர்காலத்தில் சிறிலங்காவுக்கு பாரிய அழிவை உண்டாக்குவதாகவே இருக்கும்.


எனவேதான், சிறிலங்கா அரசானது இன்றை சூழ்நிலையினை நன்றாகப் பயன்படுத்திப் புலிகளுடன் இணங்கிப்போதல் மிகச் சிறந்ததாகும். அவ்வாறு இல்லாது சுணங்கிப் போனால் இறுதி முடிவினைப் புலிகள் எடுக்கவேண்டிய ஓர் இக்கட்டான வரலாற்று நிலைமையை எதிர்நோக்க வேண்டிவரும்.

அவ்வாறு எடுக்கப்படும் தீர்மானம் இறுதியும், உறுதியுமான யுத்தமாகவே அமையும். எனவேதான், இத்தகைய துன்பியல் முடிவு ஒன்றினை ஏற்படவிடாது, தென்னிலங்கை அரசும், ஏனைய தமிழ்கட்சி சமூகங்களும் ஒன றிணைந்து சமாதானத்திற்காக பாடுபடுதல் வேண்டும். இலங்கையின் அரசியல் கட்சிகளின் உள்ளத்தாக்கத்தால் தமிழர் வாழ்வு சிதைக்கப்படுதல் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

எனவேதான், இறுதிமுடிவினை தமிழர் தேசியத் தலைவர் பிரபாகரன் எடுப்பதற்கு முன் சிங்கள அரசானது சிந்தித்து முற்கூட்டியே செயற்படுதல் சிறந்தது ஆகும். இவ்வாறு இல்லாது தலைவரின் வேறுவகையில் முடிவுகள் முடிவுகள் எடுக்கப்படுமாக இருந்தால் அதன்பலாபலன்கள் அனைத்தையும் எதிர்காலத்தில் தென்னிலங்கை அரசு மட்டுமன்றி, மக்களும் அனுபவிக்கவேண்டிய சூழ்நிலை ஒன்று கட்டாயம் உருவாகும் என்பது திண்ணம். (முற்றும்)

# ஈராக்மீது போர்தொடுக்கப்பட்டதன்மூலமே அமெரிக்காவை அழிவிலிருந்து காக்கமுடிந்தது

## ஜோர்ஜ் புஷ் தெரிவிப்பு



ஈராக்கின்மீது அமெரிக்கா போரை மேற்கொண்டதன்மூலம் - உலகையும், அமெரிக்காவையும் பாதுகாக்க முடிந்ததாக, அமெரிக்க அதிபர் மக்களுக்கான தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

நடைபெறப்போகும் அமெரிக்க ஜனாதிபதிக்கான பொதுத்தேர்தலில் தனக்கு ஏற்படக்கூடிய எதிர்ப்புகளுக்கு முன்கூட்டியே பதில் தெரிவிப்பதாகவே இது அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதி போட்டிக்கான தேர்வில் ஜனநாயகக் கட்சியின் செனட்டர் ஜோன் கெரியின் வெற்றியும் மேற்குறிப்பிட்ட கருத்தை வெளிப்படுத்தக் காரணமாக அமைந்திருக்கலாம் எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தை மீண்டும் புதுப்பிக்கவேண்டும் எனக் காங்கிரஸ் கேட்டுள்ளது.

இதன்மூலம் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கும் படையினரின் பாதுகாப்பிற்கும் வேண்டிய தேவைகளை நிவர்த்திசெய்யவேண்டும் எனவும் கேட்டிருந்தார்.

ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகளின்மீது படைபலத்தைப் பிரயோகித்தமையே - லிபியா பாரிய சேதத்தை விளைவிக்கக்கூடிய ஆயுத உற்பத்தியை தடைசெய்வதற்கு முன்வந்தமைக்கு ஒரு காரணம் எனவும் குறிப்பிட்டார்.

# பெரும் பரபரப்பை ஏற்படுத்திவரும் குளோனிங் குழந்தை உருவாக்கம்



குளோனிங் எனப்படும் விஞ்ஞான முறையில் பெண்முட்டை ஒன்றுடன் - ஆணின் தோல்கலத்தில் காணப்படும் மையக்கருவுடன் இணைந்து புதிய மனித உயிர்களை உருவாக்குவதற்கு 'மவேரிக்' இல் அண்மையில் விஞ்ஞானிகள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்திடமிருந்து எதிர்ப்புகள் தோன்றியுள்ளன.

இந்த முயற்சி மக்களிடையே மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதால் இந்தமுறை மூலம் குழந்தைகளை உருவாக்குதல் நிறுத்தப்படவேண்டும் என ரோயல் சொசைட்டியின் தலைவர் ரோபேட் மே தெரிவித்துள்ளார்.

கருத்தரிப்புத் தொடர்பான ஆராட்சிகளை மேற்கொண்டுவரும் அமெரிக்க அறிஞரான டொக்டர் பநோஷ் சவோஷ் - குளோனிங் முறையில் உருவான கருவொன்றை பெண் ஒருவரின் கருப்பையுள் செலுத்தி வளர்த்து வருவதாகத் தெரிவித்துள்ளார். குழந்தை உருவாவதற்கான 30% சந்தர்ப்பம் இதில் உள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இவரின் செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்துவெளியிட்ட ரோயல் சொசையிட்டியின் தலைவர் ரோபேட் மே பாதுகாப்பில்லாத தொழில்நுட்பமொன்றை மனிதன் மீது பிரயோகிக்க முற்படுவதாகவும் கருத்துத் தெரிவித்தார்.

அத்துடன் விஞ்ஞான முன்னேற்றங்கள் தவறான முறையில் பிரயோகிக்கப்படவில்லை என்பதையும் மக்களுக்கு உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் ரோபேட் மே தெரிவித்துள்ளார்.




# கோழிகளை அழிப்பதில் தாய்லாந்து தீவிரம்!

தாய்லாந்தில் பல மில்லியன் கோழிகள் அழிக்கப்பட்டு வருவதாக - அந்தநாட்டு அரசு அறிவித்துள்ளது.

கடந்த நவம்பர்மாதம்முதல் தாய்லாந்தில் ஐந்து மாகாணங்களில் வாந்திபேதி நோயின் தாக்கம் அதிகரித்து வருவதையடுத்து, இந்த நோயின் தாக்கத்துக்குள்ளான ஆயிரக்கணக்கான கோழிகள் அழிக்கப்பட்டுவருகின்றன.

கொலரா நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே கோழிகள் அழிக்கப்படுவதாக தாய்லாந்தின் பிரதி சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உலகில் கோழி இறைச்சியை ஏற்றுமதி செய்வதில் முன்னணி வகிக்கும் நாடான தாய்லாந்தின் கோழி இறைச்சிக்குக் கடந்த வாரம் முதல் சிங்கப்பூரில் தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும், தாய்லாந்தில் இருந்து அதிகள்வு கோழி இறைச்சியை இறக்குமதி செய்யும் ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இறக்குமதி செய்வதை தடை செய்யவில்லை.

# கொலம்பிய தீவிரவாதிகளுக்கு 10 ஆயிரம் துப்பாக்கிகள்!



பெரு" நாட்டின் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் விலடிமினோ மொன் டெகினோஷ் கொல்ம்பியத் தீவிரவாதிகளுக்கு வழங்குவதற்கென 10000 துப்பாக்கிகளை ஜோர்தானிலிருந்து கடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தார். அத்துடன் மொன்டெகினோஷிற்கும் அமெரிக்க புலனாய்வுப் பிரிவிற்கும் இடையே தொடர்புகள் இருப்பதாகவும் இவருக்கு எதிராக வாதாடிய சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளார்கள்.

இதனால், அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் 'ஜோர்ஜ் ரெனெட்' செவ்வாய்க்கிழமை விலடிமினோ மொன்டெகினோஷ் சார்பாக வாதாடும் சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

1990 ஆம் ஆண்டுகளில் கொலம்பியத் தீவிரவாதக் குழுக்களின் சட்டவிரோதமான போதைவஸ்த்துக் கடத்தலின்போதே துப்பாக்கிகளை பெருநாட்டின் உதவியுடன் வழங்கப்பட்டன. பின்னர் இந்தக் கடத்தலை அமெரிக்கா முறியடித்திருந்தது.



சம்யுக்தா ராணுவ தாங்கியின் எலக்ரோனிக் மாதிரி வடிவத்தை ஹைதராபாத்தில் நடந்த ஒரு விழாவில் ராணுவத் தளபதி என்.சி.விஜியிடம், ஜனாதிபதி அப்துல் கலாம் வழங்குகிறார். அருகில் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் காணப்படுகிறார்.

# அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுடன் ஜஸ்வந் சின்ஹா சந்திப்பு!



இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த சினஹா தனது அமெரிக்க விஜயத்தின்போது, அமெரிக்க அதிபர் 'புஷ்' ஐ, வாஷிங்ரனில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடையே வளர்ந்துவரும் நல்லுறவை அமெரிக்க அதிபர் பாராட்டியுள்ளதுடன், குறிப்பாக காஷ்மீர் பிரச்சினையில் ஏற்பட்டுவரும் முன்னேற்றங்களையும் வெகுவாகப் பாராட்டியுள்ளார். அத்துடன் அமெரிக்காவின் ராஜாங்க அமைச் சர் கொலின் பவலுடன் , சின்ஹா 90 நிமிடம் வரை உரையாடினார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவிற்கும், மிகப்பெரிய வல்லரசான அமெரிக்காவிற்கும் இடையே நெருக்கமான உறவுகள் வலுவாகக் காணப்படுவதாகவும் 'ஜஷ்வந் சின்ஹா குறிப்பிட்டி ருந்தார். இதனிடையே சென்றவாரம் அமெரிக்க அதிபர் புஷ் தனது உரையின்போது இரு நாடுகளுடையேயும் உறவுகள் வலுவடைந்து வருவதாகவும், குறிப்பாக பாதுகாப்பான அணுசக்தி உபயோகங்கள் மற்றும் கண்டத்தில் இருந்து கண்டம் செல்லும் விண்வெளி தொழில்நுட்பங்களில ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஆகியவற்றையும் புஷ் பாராட்டியிருக்கிறார்.

## ஊர்சுற்றி எழுதுவது

நாடளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி விரைவில் முன்வரக்கூடுமென்று சில வாரங்களாகவே சிங்கள, ஆங்கில பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துகொண்டிருந்தன.

இந்தச் செய்திகளில் உண்மையில்லை என்பதும், நாடாளுமன்றத்தை தான் கலைக்கப் போவதில்லையென்றும், ஜனாதிபதி அந்தச் செய்திக்கு மறுப்புத் தெரிவித்துவந்தார்.

ஜே.வி.பி என்ற மக்கள் விடுதலை முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் நண்டநாட்களாக நடத்திவந்த பேச்சுவார்த்தை முடிந்து, ஜனவரி இருபதாம் திகதி உடன்படிக்கையில் கையெழுத்திடப் போகிறார்கள் என்றும் சிங்களப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தது.

இதையும் ஜனாதிப்தி மட்டுமல்ல சுதந்திரக் கட்சியினரும் மறுத்தனர். ஆனால், சிங்களப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டது போல, ஜே.வி.பி - சுதந்திரக் கட்சி உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் ஜனவரி 20 ஆம் திகதி அன்றே கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி விரும்பாமலோ அல்லது அவருக்குத் தெரியாமலோ ஒப்பந்தம் கைசாத்திடுவதற்கான திகதி நிர்ணயிக்கப்பட்டதா?

எது எப்படியிருந்தாலும், இந்த ஒப்பந்தம் சிங்களப் பத்திரிகைச்செய்தி தெரிவித்தபடி கைச்சாத்திட்டது போலவே, நாடாளுமன்றத்தையும் திடீரெனக் கலைத்து, பொதுத் தேர்தல் நடத்துவதற்கான அறிவித்தலை ஜனாதிபதி பிரகடனப்படுத்தக்கூடும் என்று ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு கட்டுரையாளர் குறிப்பிடுகிறார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புத் தலைமைப்பொறுப்பை ஜெனரல் ஹொவ்டே மீண்டும் வந்து பொறுப்பேற்கவுள்ளார். இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் அகாஷி மீண்டும் இலங்கைக்கு வந்திருக்கிறார்.

உதவிவழங்கும் வெளிநாடுகளின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு சென்று புலிகளின் அரசியற்துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித் துச்சென்றிருக்கின்றனர்.

ஜனாதிபதியினதும், பிரதமரினதும் பிரதிநிதிகள் மனோவும் - மாலிக்கும் மீண்டும் சந்தித்துப் பேசமுன்வந்தனர்.

கிழக்கில் ஆயுதப்படைகளின் எதிர்ப்பில்லாமல் பொங்குதமிழ் நடத்துவதற்கு ஏற்பாடு நடைபெற்றது.

இவையாவும் நாட்டில் மீண்டும் சமாதான முயற்சிகள் மேலோங்குவதற்கான அறிகுறிகளாகத் தென்பட்டன!

இதேசமயம் ஜே.வி.பியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் கடந்த 20 ஆம் திகதி செய்துகொண்ட ஒப்பந்தம் இந்தச் சமாதான முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும் என்பதையே காட்டுகிறது.

இந்த ஒப்பந்தம் செய்த மறுவினாடியே, ஜே.வி.பித் தலைவர் தெரிவித்த கருத்துக்கள் முரண்பாடாக இருக்கின்றன.

ரஜீவும், ஜே.ஆரும் 1987 ஆம் ஆண்டில் கொழும்பில் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இந்த ஒப்பந்தப்படி வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருக்கும். இந்த இணைப்பை கிழக்கு மாகாண மக்கள் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஊர்ஜிதப்படுத்தவேண்டும்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட மறுகணமே ஜே.ஆர் சொன்னார் "வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்து நான் பிரசாரம் செய்வேன்" என்றார்.

இன்று ஜே.வி.பி தலைவர் தெரிவித்துள்ள முரணான கருத்துக்களுக்கும், இருகட்சியின் கூட்டறிக்கையில் காணப்படும் முரண்பாடுகளும் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானதைத்தொடர்ந்து சில இடங்களில் வெடித்துள்ள மோதல்களும், உயிர்ப்பலியும் நாட்டில் சமாதான முயற்சிகள் உருப்பெறக்கூடிய வாய்ப்பை வெளிகாட்டவில்லை. தமிழ்மக்களுக்கு அவர்கள் உரிமையுடன் வாழ்வதற்கு விட்டுக் கொடுப்பதில்லை என்ற மனப்பான்மை சிங்களப் பேரினவாதிகளிடம் இருக்கும் வரை எந்த சமாதான முயற்சியும் வெற்றியளிக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது என்றார் நண்பர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மக்களின் கஷ்டங்களை நீக்குவதற்காக இராணுவ பாதுகாப்பை புறந்தள்ளமுடியாது

## வலி.வடக்கு மக்கள் பிரதிநிதிகளிடம் - சுசில்சந்திரபால

(யாழ்ப்பாணம்)

மக்களின் கஸ்டங்கள், கடினங்களைத் தீர்ப்பதற்காக இராணுவ பாதுகாப்பை புறந்தள்ளிவிட்டு செயற்படமுடியாதென - யாழ்.மாவட்ட இராணுவதளபதி மேஜர் ஜெனரல் சுசில சந்திரபால தெரிவித்தார்.

வலி.வடக்குப் பிரதேச செயலகத்தில், நேற்று நடைபெற்ற மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். வலி.வடக்குப் பிரதேச செயலர் க.குணராசா தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், பொதுமக்கள் பிரதிநிதிகள் இராணுவ உயர் அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த சுசில் சந்திரபால, புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் சமாதானம் மலர வேண்டும் என்பதையே அனைவரும் எதிர்பார்த்திருந்தனர் என்பது எமக்கு நன்கு தெரியும். எனினும் இராணுவம் அந்த எதிர்பார்ப்பை முறிக்கும் நோக்குடன், மீண்டும் போரைத் தொடங்கும் நோக்கம் எமக்கில்லை. யுத்தம் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தமுடியாது. பேச்சுவார்த்தைகளின் மூலமே உண்மையான சமாதானத்தை கொண்டுவரமுடியும் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

மக்களின் கஷ்டங்களைத் தீர்ப்பதற்காக இராணுவ பாதுகாப்பை புறந்தள்ளிவிட முடியாது. காங்கேசன் துறைமுகம், பலாலி விமானத்தளம் ஆகியவற்றின் பாதுகாப்புக்களை முக்கியமாக கருத்திற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துவெளியிட்ட தெல்லிப்பளை ப.நோ.கூ சங்கத் தலைவர் சி.சிவமகாராசா தனதுரையில், வவுனியாவில் பொதுமக்களோடு நல்லமுறையில் தொடர்புகளை வைத்திருந்த தளபதி இங்கு வந்திருப்பதால் வலி.வடக்கு மத்தியில் மீளக்குடியமர்வது தொடர்பாக - சாதகமான பதில் கிடைக்குமென பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மக்களின் எதிர்பார்ப்பு ஏமாற்றமாக இருக்கக்கூடாது. தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, சொந்த இடத்தில் இயங்க அனுமதிக்கப்பட்டபோதும், அந்துப்பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. இதேநிலைமையே, யூனியன் கல்லூரிச் சூழலிலும் நிலவுகின்றது.

தெல்லிப்பளை புற்றுநோய் சிகிச்சை நிலையம், வைத்திய அதிகாரி பணிமனை ஆகியன இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டபோதும் இன்னமும் தடைகளும் இடர்பாடுகளும் தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கட்டடம் எம்மிடம் கையளிக்கப்பட்டபோதும், அங்கிருந்து பழைய விறகைக்கூட எடுத்துவர படையினர் அனுமதிதர மறுக்கிறார்கள். மக்களை மீளக்குடியமர விடாமாமைக்கு இராணுவ பாதுகாப்புத்தான் காரணம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

இளவாலை, கருகம்பனை, கொல்லங்கலட்டி, பன்னாலை, வித்தகபுரம், வீமன்காமம், மாவிட்டபுரம் போன்ற இடங்களில் மக்களை ஏன் குடியமர்த்தமுடியாது என கேள்வி எழுப்பினார்.

இந்தச் சந்திப்பில், பிரதேச செயலர் க.குணராசா, க.இராமலிங்கம், சி.முத்துக்குமாரசுவாமி, க.முத்துலிங்கம், பொ.இராசேந்திரம் உட்படப் பலர் கருத்துக்களை வெளியிட்டனர். முன்னாள் இராணுவப்பேச்சாளரும், தற்போது 51 ஆவது டிவிசன் தளபதியுமான சனத் கருணாரட்ணவும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

(ச)

## காணாமற்போனோர் சங்கம்

# ஐம்பத்தாறாவது சுதந்திரதினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்க ஏற்பாடு

படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் அடுத்த மாதம் நான்காம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் 56 ஆவது சுதந்திரதினத்தை கறுப்பு கொடித் தினமாக அனுஷ்டிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அன்றையதினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இலங்கை தேசியக் கொடி ஏற்றுவதற்கு பதிலாக கறுப்புக்கொடியை ஏற்றவுள்ளதாகவும், பிள்ளைகளின் நிலை தொடர்பாக அறிய முடியாதுள்ளபோது, சுதந்திர தினத்தை கொண்டாடுவதில் எதுவித பலனும் இல்லையெனவும் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான முக்கிய கலந்துரையாடலொன்று, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வீதியிலுள்ள அன்னையர் முன்னணி அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் சு.பொ.சற்குணம் தெரிவித்தார். ஜனாதிபதியைச் சென்று சந்திப்பது தொடாபாகவும் விரிவாக ஆராயப்படவுள்ளதால் சங்க உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வது அவசியமானதெனவும் அவர் தெரிவித்தார். (ச)

## தமிழ்ச்செல்வன்...

உட்பட ஐந்துபேர் அடங்கிய குழுவினர் இன்று வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளனர். இவர்கள் வன்னியில் யப்பானிய நிறுவனங்கள் மேற்கொண்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் ஆராயவுள்ளனர்.

## மார்ச்மாதம்வரை மழைவீழச்சி இல்லையாம

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மார்ச் மாதம் வரை நாட்டில் மழைவீழ்ச்சி கிடைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இல்லாதிருப்பதாக இலங்கை வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களம் அறிவித்துள்ளது.

மார்ச் மாதத்தின் இறுதியிலும் இந்த மழை வீழ்ச்சிக்குறைவால் பெரும் வறட்சி நிலவக்கூடிய சாத்தியக்கூறு தென்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர் தம்வழியில்...

சமாதான முயற்சி தடைப்பட்டுள்ளமையானது முழு இலங்கை மக்களையுமே கவலை கொள்ளச் செய்துள்ளது. இவ்வாறு சமாதான முயற்சி தடைப்பட்டிருப்பது தமிழ் மக்களையே பெரிதும் பாதித்துள்ளது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பி யும் செய்து கொண்டுள்ள கூட்டு ஒப்பந்தமானது சிறுபான்மையினரைப் பாதிப்பதாகவே அமையும். இக்கூட்டு ஒப்பந்தம் சமாதானத்திற்கு ஒருபோதும் உதவப்போவதில்லை.

சிங்கள பேரினவாத சக்திகள் சுயமாக இயங்கி சமாதான முயற்சிகளைத் தடுக்கின்றபோது தமிழர்களும் சுயமாக இயங்கித் தமது தேவைகளை பெற்றுக்கொள்ள சர்வதேச சமூகம் அங்கீகாரம் அளிக்க வேண்டும்.

ரோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதி உதவியை இலங்கைக்கு வழங்குவதில் சர்வதேச சமூகம் மிகவும் கவனமாக நடந்து கொள்ளவேண்டும்.

இல்லையேல் தமிழர்களை மட்டுமல்ல சர்வதேச சமூகத்தையும் சிங்கள பேரினவாதம் ஏமாற்றிவிடும்.

சமாதான முயற்சிகளைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் போலியான சமாதான முன்னெடுப்புகளை பகிரங்கப்படுத்தவும் சர்வதேசசமூகம் முன்வரவேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

## பொலிஸாரை...

அண்மையில் வல்வெட்டித்துறைக்கு இடமாற்றம் பெற்றுவந்தார்.

இவர் வல்வெட்டித்துறை பொலிஸ நிலையத்திலிருந்து கடந்த 15 ஆம் திகதி தொலைபேசி நிலையம் ஒன்றுக்கு சென்றிருந்தார். ஆனால், இவர் இதுவரை பொலிஸ் நிலையத்திற்குத் திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிவிலுடையில் பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியே சென்ற இவர, தனது உடமைகளையும் எடுத்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி...

தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுடன் தன்னாட்சி அதிகாரத்தை வழங்குவதற்கு ஜே.வி.பியும், சுதந்திரக்கட்சியும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த இரண்டு கட்சிகளும் - தமிழ் மக்களின் பிரச்சினையில் மாறுபட்ட கருத்துக்களையே கொண்டிருக்கின்றன.

மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதை சுதந்திரக்கட்சி ஆதரிக்கின்ற அதேவேளை, ஜே.வி.பியோ அதிகாரங்களை பரவலாக்கும் கருத்துக்கள் தெரிவித்துள்ளது.

இரண்டு கட்சிகளுமே தமிழ்மக்களுக்கு அதிகாரங்களைக் கொடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. இநதநிலை எமது மக்களைப் பொறுத்தவரையில் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

மேலும், விடுதலைப் புலிகள் தமிழ மக்களின் ஏகபிரதிநிதிகளல்ல என்று கூறும் இந்தக் கட்சிகள் தமிழர் இனப்பிரச்சினை தீர்வுகாண ஏனைய கட்சிகளுடனும் பேச்சுநடத்தவுள்ளதாகக் குறிபிட்டுள்ளன.

இந்தக் கருத்து ஏற்றக்கொள்ளக் கூடியதொன்றல்ல.

தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்காத எந்தவொரு தரப்பினருடனும் - எமது இயக்கம் எந்தவொரு சமரச முயற்சிக்கும் செல்லாது.

தற்போதைய சமாதான முயற்சிகள் நாட்டின் இறைமை, தேசிய ஒருமைப்பாடு என்பவற்றுக்கு ஆபத்தானது என்று கூறும் இந்த இரு கட்சிகளினதும் நிலைப்பாடு ஒரு உளநோயைப் போன்றது.

இந்த இரண்டு கட்சிகளினதும் கூட்டணியின் நோக்கம் - சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியதாகும். சாதாரண சிங்கள மக்களிடம் இருந்து அடுத்து வரும் தேர்தலில் அரசியல் அதிகாரத்தினை தேடிக்கொள்வதற்காகவே இந்தக் கூட்டணி அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டணிக்கு வாக்களித்து அதிகாரத்துக்கு வர இடமளித்தால் என்ன நடக்கும் என்பதை சிங்கள மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

## உள்ளக்குமுறல்..

எமது நிலைப்பாட்டினை இன்றைய தினம் மீண்டும் பிரகடனப்படுத்துகின்றோம். தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப்போராட்டத்தையும்,ஏக பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்கவேண்டும். தமிழினத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள பயங்கரவாத சாயம் உடனடியாக நீக்கப்படவேண்டும்.

அரச பயங்கரவாதம் தமிழினத்திற்கு இழைத்த அநீதிகளுக்கு நீதியான தீர்வு வேண்டும். அநீதிகள் தொடரக்கூடாது. சர்வதேசம் அநீதிகளுக்கு துணைபோகக்கூடாது.

எமது அபிலாசைகளாகிய சுயநிர்ணய உரிமை, மரபுவழித்தாயகம், தனித்துவமான தேசிய இனம் என்பவை அங்கீகரிக்கப்பட வேண்டும் பொங்கு தமிழ் எமது உள்ளக் குமுறல். இது அடங்கும் வரை நாம் பொங்கிக் கொண்டே இருப்போம்.

(07)

## 75 ஆயிரத்திற்கும்...

கல்வித்துறைப் பொறுப்பாளர் வேந்தன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றியதுடன் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இதன் பின்னர், தமிழ் வாழ்த்துடன் மதத் தலைவர்களின் ஆசியுரை, மற்றும் வரவேற்புரையும், மாணவர் அவைத்தலைவர் கே.அருளானந்தராஜாவின் தலைமையுரையும் இடம்பெற்று தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெற்றன.

மேலும், நிகழ்வில் அமைச்சர் பீசந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், சிவாஜிலிங்கம், அரியநாயகம் சந்திரநேரு, ஞா.கிருஸ்ணபிள்ளை, மனோ கணேசன் ஆகியோரும் பிரதமரின் செயலாளர் அதாவுடஹெட்டி, கொள்கைத்திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிசாகிர் மௌலானா உட்பட மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸ் சிறப்புரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் -

"எமது தமிழ் மக்களை எந்த சக்தியாலும் ஏமாற்றிவிடமுடியாது. எமது உரிமைப் போராட்டத்தில் இறுதி வெற்றி கிடைக்கும்வரை தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்ட சக்தியாக நமது தேசியத் தலைவரின் பின்னால் அணிதிரள்வதுடன், பக்கபலமாகவும் திகழ வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரை முஸ்லிம் மக்களுடன் நல்லுறவை[illegible] பேணி வருகின்றோம்.

ஆனால், சில முஸ்லிம் தலைவர்கள் சிங்கள அரசியல்வாதிகளதும், பேரினவாதத்தினதும் கைக்கூலிகளாக மாறி தனிஅலகு என்ற கோஷங்களைக் எழுப்பி, நல்ல நிலைமைகளைக் குழப்பிவருகின்றனர்.

ஆனால், முஸ்லிம் புத்திஜீவிகள், ஏனையோர் இந்த விடயத்தில் மிகத்தெளிவாகவேயுள்ளனர். தெளிவான கருத்துக்களையே எம்மிடம் தெரிவித்துவருகின்றனர்.

எனினும், இந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் பாரிய பிரச்சினைகளைத் திட்டமிட்டு உருவாக்கிவருகின்றனர்.

முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்குமிடையே பிரச்சினைகள் வரக்கூடாது என்பதிலும் முஸ்லிம்களுக்கு சமமான உரிமையுண்டு, சுதந்திரமாக அவர்கள் வாழலாம் என்பவற்றிலும் நாம் உறுதியாக உள்ளோம்.

இந்த நிலையில், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் முஸ்லிம் மக்களைப் பிழையாக வழிநடத்தவே முற்பட்டார்களானால் அந்த நிலைப்பாடு பாரிய விளைவுகளையே ஏற்படுத்தும்.

அப்பொழுது முஸ்லிம் அரசியல் தலைவர்களே முஸ்லிம்களின் எதிரிகளாகவும் மாறுவார்கள்" இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்வில் பின்வரும் பொங்கு தமிழ் பிரகடனம் செய்யப்பட்டது.

## மத்தியஸ்த நிலையிலிருந்து...

இதனது இறுதித்தீர்வு சகல சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமையும். இந்த நிலைப்பாடுகள் சரிவராவிட்டால் சமாதான முயற்சியை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம். நாட்டில் விரைவில் தேர்தல் நடத்தப்படுமா என்ற வினாவிற்கு அவர் பதிலளிக்கையில் - இதற்கு ஜனாதிபதி மட்டுமே பதிலளிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

வெளிநாட்டு உறவுகள் தொடர்பாக கதிர்காமர் தெரிவிக்கையில், சரிந்துபோன வெளிநாட்டு உறவுகளை மீளவும் சமநிலையுடன் புதுப்பிப்போம், உயர்வுநிலையிலிருந்த வெளிநாட்டு உறவுகள் கடந்த இரண்டு வருடங்களாக சரிவான நிலைக்கு சென்றுள்ளதை நாம் கண்டுள்ளோம் அத்துடன் எமது அயல் நாடுகளுடன நாம் மிகவும் நெருங்கிய ஒததுழைப்பை மேற்கொள்ளவுள்ளோம் இது மிகவும் முக்கியமானது எனவும் தெரிவித்தார்.

மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணியின் அரசாங்கத்தின் கீழ்-நோர்வே அரசின் அனுசரணை முயற்சி மீளாய்வு செய்யப்படுமென இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

நோர்வேயின் அனுசரணை தொடாபில் பல கேள்விகள் உள்ளன. முன்னணி அரசாங்கம் அமைந்தவுடன் அது தொடர்பாக நாம் பரிசீலிப்போம் எனத்தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா இரு கட்சி உடன்படிக்கையிலும் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை தொடரப்படும் என உள்ளது. எவ்வாறாயினும நாம் இந்தப் பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் மட்டுமல்லாது மற்றைய கட்சிகளுடனும் பேசுவோம்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் விடுதலைமுன்னணி அணிசேராக் கொள்கையையே வெளிநாட்டுக் கொள்கையாகப் பின்பற்றும் எனவும் தெரிவித்தார்.

## காணவில்லை



### அந்திரேஸ்பிள்ளை எலிசபெத்

**பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரும் கோப்பாயில் வசிப்பவருமான அந்திரேஸ்பிள்ளை எலிசபெத் என்பவரை 21-01-2004 (புதன்கிழமை) 2 மணியிலிருந்து காணவில்லை. கடைசியாக மெல்லிய நீலம் கறுப்பு மஞ்சள் கலந்த சட்டை அணிந்திருந்தார். இவர் மனநோயாளி ஆவார்.**

**இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது முகவரியுடனோ தொடர்பு கொள்ளவும்.**

தொ.பே:- 222 6508,
222 2193.

Dr. ராஜேந்திரா
கோப்பாய் மத்தி,
(நாவலர் பாடசாலை அருகாமையில்)
கோப்பாய்.

(599)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.